ல ரூபா: 10.00

# வலம்புரி

Valamburii

...கள்: பத்து

...ந 07 வள்ளுவர் ஆண்டு 2037 ஆடி 16 செவ்வாய்க்கிழமை (01.08.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 225

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# மாவிலாற்றில் உக்கிர மோதல்

## 35 புலிகள் பலி-இராணுவம் | 20 இராணுவம் பலி-புலிகள்

(திருகோணமலை)

மாவிலாற்று அணையை கைப்பற்றும் நோக்குடன் நேற்று இராணுவத்தினரால் மும்முனைத் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத்தாக்குதலினையடுத்து விடுதலைப் புலிகளினால் பதில்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனையடுத்து இரு தரப்பினரிடையேயும் உக்கிர மோதல் இடம் பெற்று வருகிறது. இத்தாக்குதலில் 35 விடுதலைப்புலிகள் பலியானதாகவும் தமது தரப்பில் 7 பேர் பலியானதாகவும் இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் தமது தாக்குதலில் 20 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் தமது தரப்பில் மூவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டதாகவும் விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் கிளைமோர் 18 படையினர் உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் கந்தாளை–சேருநுவர வீதியில் நேற்றிரவு 10.30 மணியளவில் படையினரை ஏற்றிச் சென்ற பஸ் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

மாவிலாறு படைநடவடிக்கைக்குச் சென்று கொண்டிருந்த பஸ்ஸே கிளைமோரில் சிக்கியதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் பஸ் மீது கிளைமோர்க்குண்டு அல்லது கண்ணிவெடித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாமென இராணுவத்தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

கந்தாளை –சேருநுவரப் பகுதியில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே தாக்குதல் இடம் பெற்றுள்ளதாக பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையத்தை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகின. (ச)

## ...ட்டப்பிராயில் கிளைமோர் ...2 இராணுவத்தினர் காயம்

...ல்வியங்காடு கட்டப்பிராய் 3 ஆம் கட்... பகுதியில் ரோந்து சென்ற இராணுவத்...ரை இலக்குவைத்து மேற்கொண்ட கிளை...ர்த்தாக்குதலில் இரு இராணுவத்தினர் ...யமடைந்தனர்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் ...வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் இரண்டு படையினர் காயமடைந்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

காயமடைந்த இருவரும் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-15,133)

## பிச்சை எடுப்பவர் சுட்டுக்கொலை

யாழ்.கோட்டை அகழிக்குள் வைத்து கைக்குண்டு எறிந்ததாகக்கூறி இராணுவத்தினரால் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்ற இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் யாழ்.நகரில் கில்லி என்றழைக்கப்படும் பிச்சை எடுப்பவரென கூறப்பட்டபோதும் சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இதேவேளை கொல்லப்பட்டவரின் சடலத்திற்கு அருகில் 3 கைக்குண்டுகள் காணப்பட்டது. அவரது சுட்டுவிரலில் கைக்குண்டின் வளையம் ஒன்றும் காணப்பட்டது. சம்பவ இடத்திற்கு நேரில் சென்ற யாழ்.மேலதிக நீதிபதி சிறிநிதி நந்தசேகரன் சடலத்தை மரண விசாரணைக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்குமாறு உத்தர விட்டார். (எ-5,133)

## திருகோணமலையில் நேற்று இரு சிங்களவர் சுட்டுக்கொலை

(திருகோணமலை)

திருகோணமலையில் இரு சிங்களவர்கள் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

திருகோணமலை நெல்சன்புரவில் கேவ தேவகே சுசந்த லக்ஷ்மன் (வயது 30) என்ற சிங்களவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

நெல்சன்புரவில் உள்ள மின்சார பொறியியலாளர் அலுவலகத்திற்கு அண்மையில் நேற்று காலை 9.45 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை திருமலைப்பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை திருகோணமலை செல்வநாயகபுரத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

## வயோதிபரை மோதிய சம்பவம் இராணுவச் சாரதியின் பதவிகள் ரத்து

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் கடந்த 28 ஆம் திகதி இராணுவ ஜீப் வண்டி மோதி வயோதிபர் உயிரிழந்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று யாழ்.நீதிமன்றில் மேலதிக நீதிவான் சிறிநிதி நந்தசேகரன் முன்னிலையில் இடம் பெற்றது.

சம்பவத்துடன் தொடர்புடைய ஜீப் வண்டிச் சாரதி இராணுவப் பொலிஸாரால் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். வழக்கை விசாரணை செய்த நீதிவான் சாரதியை ஒரு இலட்சம் ரூபா இரு ஆட்பிணையில் விடுதலை செய்ததுடன் அச் சாரதிக்குரிய பதவிகள் அனைத்தையும் ரத்துச்செய்வதோடு அவரை மக்கள் நடமாட்ட மற்ற பகுதிக்கு கடமைக்கு அமர்த்தப்படவேண்டும் எனவும் உத்தரவிட்டார். இவ்வழக்கு நாளைவரை ஒத்திவைக்கப்பட்டது. (எ-133)

## கண்காணிப்புக்குழு வெற்றிடத்திற்கு ஆசிய நாட்டுப் பிரதிநிதிகள் ?

(கொழும்பு)

கண்காணிப்புக் குழு உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு ஆசிய நாட்டவர்களை சேர்த்துக் கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

பின்லாந்து மற்றும் டென்மார்க் நாட்டவர்கள் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிலிருந்து விலகுவதால் ஏற்படும் வெற்றிடத்திற்கு ஆசிய நாடுகளில் இருந்து உறுப்பினர்களை வரவழைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே
கனரிக் கல்வப் பகுதி

## செஸ்னா ஸ்கை வகை விமானங்கள் விடுதலைப்புலிகள் வசம் உள்ளன !

### இந்திய புலனாய்வுத்துறை தகவல்

விடுதலைப்புலிகளிடம் செஸ்னா ஸ்கை மாஸ்டர் வகையைச் சேர்ந்த மேலும் இரண்டு இலகுரக விமானங்கள் இருப்பதாக இந்திய புலனாய்வுத்துறை இலங்கை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

இந்த இரண்டு விமானங்களும் இரண்டு தடவை வானில் அவதானிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு தடவை வவுனியா விமானப்படை தளத்தில் உள்ள ரேடாரில் பதிவாகியிருப்பதாகவும் இலங்கைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்திய அரசினால் வழங்கப்பட்ட இந்திரா என்னும் ரேடார் கருவிகள் வடமத்திய மாகாணத்தில் (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இலங்கை-தென்னாபிரிக்க டெஸ்ட் தொடர்

# முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 153 ஓட்டங்களால் வெற்றி

தென்னாபிரிக்காவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி இன்னிங்ஸ் மற்றும் 153 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 போட்டிகள் கொண்ட தொடரை 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் வந்துள்ள தென்னாபிரிக்க அணி 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.



இத் தொடரின் முதலாவது டெஸ்ட் போட்டி கடந்த 27 ஆம் திகதி முதல் நேற்று வரை கொழும்பு எஸ்.எஸ்.சி. விளையாட்டு அரங்கில் நடைட பெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இனிங்



சில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 169 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதில் துடுப்பாட்டத்தில் வில்லியர்ஸ் 65 ஓட்டங்களையும் றொடல்ப் 29 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக டில்கார பெனாண்டோ, முத்தையா முரளிதரன் ஆகியோர் தலா4 விக்கெட்டுக்களையும் மகரூப் 2 விக்கெட்டுக் களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இனிங்சை ஆரம்பித்த இலங்கை அணி, குமார் சங்கக்கார-மஹலே ஜெயவர்த்தனர் இருவரும் இணைந்து பெற்ற 624 ஓட்டங்களால் 5 விக்கெட் இழப்பிற்கு 756 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் அணித் தலைவர் மஹேல ஜெயவர்தன 374 ஓட்டங்களையும் உப-அணித் தலைவர் சங்கக்கார 287 ஓட்டங்களையும் திலகரட்ண டில்சான் 45 ஓட்டங்களையும்



பெற்றனர்.

பந்து வீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக ஸ்ரையின் 3 விக்கெட்டுக்களையும் நெல், ஹோல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து 587 ஓட்டங்களை பெற்றால் இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்கலாம் என்ற இலக்குடன் தனது 2-வது இன்னிங்சை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி இறுதி நாளான நேற்று சகல விக்கெட்டுக்களையும் இழந்து 434 ஓட்டங்களை மாத்திரம் பெற்று இன்னிங்ஸ் மாற்றும் 153 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் துடுப்பாட்டத்தில் றொடல்ப் 90 ஓட்டங்களையும் மார்க்பௌச்சர் 85 ஓட்டங்களையும் மற்றும் அன்ரூ ஹோல் 64 ஓட்டங்களையும் அணித்தலைவர் அன்ரூ பிறின்ஸ் 61 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக சிறப்பாக பந்து வீசிய முத்தையா முரளிதரன் (அணி வீசிய 157.2 ஓவர்களில்) 64 ஓவர்கள் பந்து வீசி 131 ஓட்டங்களைக் கொடுத்து 6



விக்கெட்டுக்களையும் பெனாண்டோ 2 விக்கெட்டுக்களையும் மலிங்க, ஜெயசூர்யா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப் போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களையும் வீழ்த்திய முரளிதரன் தனது 17-வது தடவையாக டெஸ்ட் போட்டி ஒன்றில் 10 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்த ஆட்டத்தின் நாயகனாக 374 ஓட்டங்களைப் பெற்று சாதனை படைத்த மஹேல ஜெயவர்த்தனா தெரிவாகினார்.

## விளையாட்டு செய்திகள்

அமிர்தன்

# துடுப்பாட்ட வீரர்களுக்கு எப்போதும் சதமடிப்பது கடினமானது-டோனி

துடுப்பாட்ட வரிசையில் 7ஆவதாகக் களமிறங்கி எப்போதும் சதம் அடிக்க



முடியாது. இது மிகவும் கடினமான காரியம். எனது முதல் இலக்கு 25 பந்தில் 30 ஓட்டங்கள் எடுப்பதுதான். அதற்குப் பிறகு வழக்கமான அதிரடியை ஆரம்பிப்பேன் என்கிறார் மகேந்திர சிங் டோனி.

இலங்கையில் நடக்கவுள்ள முத்தரப்புக் கிரிக்கெட் போட்டிகளுக்கான இந்திய அணியின் பயிற்சி முகாம் பெங்களூரில் நடக்கிறது. இதில் டோனி, யுவராஜ், ஹர்பஜன் போன்ற இளம் முன்னனி வீரர்கள் கலந்து கொண்டு பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

சமீபத்தில் நடந்த மேற்கிந்திய தொடரில் டோனி சிறப்பாக ஆடவில்லை என்று விமர்சனங்கள் எழுந்தன. இது குறித்து நேற்று முன்தினம் பெங்களூரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

ஒவ்வொரு போட்டியிலும் 7-வது இடத்தில் இறங்கி சதம் அடிப்பது என்பது மிகவும் அரிதான காரியம். அனைத்துப் போட்டிகளிலும் குறைந்த பந்துகளில் அதிக ஓட்டங்கள் சேர்ப்பதேயே விரும்புகிறேன்.

தற்போதைய துடுப்பாட்ட சராசரியான 52 ஐ விட குறையாமல் பார்த்துக் கொள்வதே அடுத்த இலக்கு. கடந்த 18 மாதங்களாக கிரிக்கெட் விளையாடி வருகின்றேன். அணியின் வெற்றிக்கு 100 சதவீதம் என்னால் முடிந்ததை செய்கிறேன்.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி முடிவு செய்யும் எந்த இடத்திலும் இறங்கத் தயார். எந்த இடத்தில் இறங்கினாலும் என்னால் சிறப்பாக துடுப்பாட்டம் செய்ய முடியும் என்ற நம்பிக்கையுள்ளது.

மேற்கிந்தியதீவுகள் தொடரில் பெற்ற அனுபவம், அதேபோன்ற மைதானங்களைக் கொண்ட இலங்கையில் விளையாட மிகவும் உறுதுணையாகவிருக்கும். கீப்பிங்கைப் பொறுத்தவரையில் கும்பிளே மற்றும் ஹர்பஜனின் சுழல் பந்துகளைக் கீப்பிங் செய்ய போதுமான பயிற்சி மேற்கொண்டு வருகிறேன்.

20/20 கிரிக்கெட் போட்டிகள் மிகவும் சுவாரஸ்யமானவை. அது ரசியர்களை மிகவும் கவரும் என்று டோனி கூறினார்.

# ருவன்டி-20 அதிரடிக்கு ஐ.சி.சி. அங்கீகாரம்

(லண்டன்)

ருவன்டி-20 போட்டிக்கு சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) முறைப்படி அங்கீகாரம் அளித்துள்ளது. டெஸ்ட் ஒரு நாள் போட்டிகள் மீதான ஆர்வம் குறைய 20 ஓவர்கள் கொண்ட ருவன்டி-20 போட்டியை இங்கிலாந்து அறிமுகப்படுத்தியது.

இந்த வகை அதிரடி ஆட்டத்திற்கு உலகம் முழுவதும் அமோக ஆதரவு காணப்பட, இந்திய கிரிக்கெட் சபையும் டுவன்டி-20 போட்டியை ஏற்றுக் கொண்டது.


சமீபத்தில் லண்டனில் நடந்த ஐ.சி.சி. கூட்டத்தில் ருவன்டி-20 போட்டிக்கு அனுமதி அளிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது. இது தொடர்பாக ஐ.சி.சி. டெஸ்ட் அந்தஸ்து பெற்ற உறுப்பு நாடுகளின் உறுப்பினர்கள் மற்றும் கிரிக்கெட் புள்ளி விபர நிபுணர்கள் வரலாற்று ஆசிரியர் சங்கத்துடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

பின்னர் ருவன்டி-20போட்டியை கிரிக்கெட்டின் அதிகாரபூர்வ ஆட்டமாக அங்கீகரிக்க ஐ.சி.சி. முடிபு செய்தது. இதைத்தவிர பல்வேறு முக்கிய அறிவிப்புக்களும் வெளியாயின.

இதன்படி ஐ.சி.சி. உறுப்புநாடுகளில் இடம் பெற்றுள்ள சிறந்த 6 அணிகளுக்கு ஒரு நாள் போட்டிக்கான அந்தஸ்து வழங்கப்படுகிறது. 3 நாட்களுக்குக் குறைவாகவோ அல்லது அணிக்கு 11 பேருக்குக் குறைவாக ஆடினால் அந்தப் போட்டிகளுக்கு முதல்தர அந்தஸ்து வழங்கப்பட மாட்டாது.

ஏ அணிகளுக்கு இடையே நடக்கும் 50 ஓவர் போட்டிகளுக்கு அனுமதி தரப்பட்டது. இந்த போட்டிகளின் சாதனைகளை கிரிக்கெட் புள்ளிவிபர நிபுணர்கள் வரலாற்று ஆசிரியர் சங்கம் பதிவு செய்யும்.

இது குறித்து ஐ.சி.சி. பொது மேலாளர் டேவிட் ரிச்சாட்சன் கூறுகையில், அதிகாரபூர்வ அந்தஸ்து பெற்ற போட்டிகளை பல்வேறு வகையாக பிரிப்பது மிகவும் அவசியம். இதனால் கிரிக்கெட் புள்ளிவிபரங்களை தொகுப்பவர்கள் பெரிதும் பயனடைவர் என்றார்.




இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் இருந்து இடமாற்றமாகிச் சென்ற ஊழியர்களுக்கான பிரிவுபசார வைபவத்தில் கலந்து கொண்ட விழா நாயகர்களையும் முகாமையாளர் மற்றும் சக ஊழியர்களையும் படத்தில் காணலாம்.

# "மன அழுத்தத்தினை மனோவலிமையாக ஆக்குதல்"

**23.07.2006 அன்று யாழ். பிரம்மகுருமாரிகள் இராஜயோக நிலையத்திற்கு தென்கிழக்காசிய பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையங்களின் பிராந்திய இயக்கு நர் இராஜயோகினி சகோதரி மீரா வின் வருகையின் போது 'மன அழுத்தத்தினை மனோவலிமையாக்குதல்' என்ற தலைப்பில் ஆற்றிய சொற்பொழி வின் சுருக்கம்.**

பயம், கவலை, மற்றும் எதிர் பார்ப்புகள் நிறைந்த ஒரு உலகி லேயே நாம் வாழ்கிறோம். விஞ்



ஞான தொழில்நுட்பத்தின் முன் னேற்றமும் நமக்கு அழுத்தத் தினை அதிகரிக்கின்றது.

நாமே மன அழுத்தத்தினை உற்பத்தியாக்குகின்றோம். அழுத் தத்தினை கொண்ட ஒருவர் அடிக் கடி வைத்தியரிடம் செல்வார். மாத் திரைகள் எடுப்பார். மதுப்பழக்கம் கொண்டவராக இருப்பார். அதி களவு நித்திரை செய்வார். அதிகளவு உண்ணுவார். எவருமே தம்மைத் தாம் பார்க்காது ஏனையோரை குற்றம் சாட்டுகிறார்கள். கணவன் மனைவியைக் குறை கூறுகிறான். மனைவி கணவனைக் குறை கூறு கிறாள் இவ்வாறே இதுவும் தொடர்ந்து கொண்டே செல்கிறது. எல்லாம் எம் கரங்களிலேயே இருக் கிறது.


மிகவும் மோசமான சூழ்நிலை யையும் மிகவும் நல்ல ஒரு சூழ்நிலை யாக எம்மால் பார்க்க முடியும். மிக வும் நல்ல ஒரு சூழ்நிலையை மிக வும் மோசமான ஒரு சூழ்நிலை யாகவும் பார்க்க முடியும். ஆகவே தெரிவு எம்கரங்களிலேயே உள் ளது. வெளிப்படையாக நடைபெறும் தாக்கங்களை எமது மனோரீதி யான உணர்வுபூர்வமான வெளிப் பாடு என்றே மன அழுத்தத்திற்கு வரையறை கூறலாம். நாமே எமது மனதின் அதிபதி. நாம் எதை நினைக்கிறோமோ அவ்வாறே ஆகி விடுகிறோம். இதில் இருந்து விடு படுவதற்கு என்ன செய்யலாம்? எமது நேரத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். விவேகமான வனாக நடந்துகொள்ள வேண்டும்.

எங்களால் அனைத்தையும் மாற்ற முடியாது. இவ்வாறு மாற்ற முடியாததை ஏற்றுக்கொள்ள வேண்டும். எந்தவொரு பிரச்சினை யையும் தனிப்பட்ட முறையில் கையாள முற்படக் கூடாது. பதிலாக இருவர் சேர்ந்தே அதனைச் செய்ய வேண்டும் ஏனெனில் இருவரது புத்தி ஒருவரைவிட சிறப்பாக வேலை செய்யும். எங்கள் பௌதீக ஆரோக் கியத்தைப் பேணவேண்டும்.

நேர்முகமான சிந்தனை எனும் கலையைக் கற்றுக்கொள்ள வேண் டும். வாழ்க்கையில் எது நடைபெற் றாலும் அதனை ஒரு பிரச்சினை யாகப் பார்க்காது சவாலாகவே எதிர்நோக்க வேண்டும். தியானம் அனைத்தையும் குணமாக்குகிறது. எம்மை நாம் பார்க்கும் நோக்கும் விதம்கூட மாறுகிறது. எம்முன் இருந்த வெறுப்பு, பொறாமை, கோபம், எதிரித்துவம், அனைத் தும் அற்றும் போய் எமது 3ஆவது கண்ணாகிய ஞானக்கண் திறக்கும் போது அவை அன்பாகவும் அமைதி யாகவும் திருப்தியாகவும் மாறுகின் றது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் ஒரு நாளில் இரு தடை வையேனும் பத்து நிமிடங்கள் எனினும் தியா னத்தைச் செய்ய வேண்டும். பொறு மையைக் கடைப்பிடிக்க வேண்டும்.







கடவுளில் நம்பிக்கையைக் கொண் டிருக்க வேண்டும். நான் செய்ததே எனக்கு விளைவாகக் கிடைக்கும் என்ற கர்மதத்துவத்தின் விதியினை நம்பவேண்டும்.

ஆகவேசுயமாற்றமேமனஅழுத் தத்தினை மாற்றும் நமது நடத்தை மூலம் நரகத்தையே சுவர்க்கமாக்க முடியும். நாம் நமது செயல்களை மாற்றினால் உலகமே சுவர்க்க மாகும். பதிலாக நாம் நமது ஆள் காட்டி விரலால் மற்றவர்களைச் சுட்டிக்காட்டி இவரால் இது நடந்தது. இவரிடம் இன்னின்ன பலவீனங் கள் இருக்கின்றன என்று கூறும் போது ஒன்றை மனதில் வைத்திருக் க வேண்டும். ஒருவரை நோக்கி ஒரு விரலைக் காட்டும் போது ஏனைய விரல்கள் அனைத்தும் உம்மை நோக்கியே இருக்கின்றது.

ஆகவே நாம் ஒரு பலவீனத் தைப் பார்த்தால் என்னில் ஏனைய நான்கு பலவீனமும் இருக்கின்றது. ஆகவே எதற்கும் கவலைப்படாது சந்தோஷமாக இருப்பதுடன் எது நடந்தாலும் நன்மைக்கே என ஏற் றுக்கொள்ள வேண்டும். எதிலும் சிக் கிக் கொள்ளாது மௌனத்திற் குச் சென்று அனைத்திற்முரிய தீர்வு களைக் காணவேண்டும். எல்லாம் எங்கள் கரத்திலேயே இருக்கிறது. ஆகவே வாழ்க்கையை அமைதி நிறைந்ததாக ஆக்குவோம் சுபீட்சம் நிறைந்ததாக்குவோம் வளம் நிறைந் ததாக்கு வோம்.

# வேலிகள் வெட்டப்பட்டதால் தோட்டங்கள் பாதிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் கோயில் குடி யிருப்பு (301) கிராம சேவையாளர் பிரிவில் பலநாட்களாக பாதுகாப்புக் காக என்று வேலிகள் வெட் டப்பட்டு பிரிக்கப்பட்டு கிடக்கின்றன. இதனால் கட்டாக்காலி மாடுகள், ஆடுகள் என் பன காணிகளுள் புகுந்து பயன் தரும் பயிர்களை மேய்வதுடன் முற் றாக அழித்தும் விடுகின்றன.

இந்த நிலையில் காணி உரிமை யாளர்கள் பயிர் பிரயோசனங்களை இழந்து பலத்த நட்டமடையும் சூழ் நிலை உருவாகின்றது. தொடர்ந்து இந்தநிலை நீடித்தால் தோட்டத் தொழிலை நம்பியிருக்கும் இப் பிரிவு மக்கள் இப்பயிர் அழிவுக ளால் மோசமாக பாதிப்பை அடைய வேண்டிய சூழ்நிலை உருவாகி வருவதாக மக்கள் கவலை அடைந் துள்ளனர். (அ-70)

# உப அதிபர் சுடப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றைய பகிஸ்கரிப்பில் நகரப் பாடசாலைகள்





யாழ்.இந்துக்கல்லூரி



யாழ்.மத்திய கல்லூரி






யாழ்.வேம்படிமகளிர் கல்லூரி

படங்கள்:-திலீவின்பன்



யாழ்.இந்துமகளிர்கல்லூரி





வெறிச்சோடிக்கிடக்கும் வகுப்புக்களும் வகுப்பறையும்...

# இன்று ஒரு தகவல்

## நிலத்தில் விழுந்த விதைகள்

ஒரு விவசாயி. விதைக்கிறத்துக்காக வயல் வெளிப் பக்கம் போனார். விதைகளை அள்ளி வீசினார். அப்ப என்ன ஆனதென்றால்.

சில விதைகள் பாதை ஓரத்திலே விழுந்தது. சில விதைகள் முள் செடிகள் மண்டியிருந்த புதருக்கு இடையிலே விழுந்தது. சில விதைகள் நல்ல நிலத்திலே விழுந்தது.

பாதை ஓரத்திலே விழுந்த விதை என்ன ஆனது என்றால் அதெல்லாம் பறவைகள் கண்ணிலே பட்டுவிட்டது. உடனே வந்து உட்கார்ந்து கொத்தி திண்டு விட்டுப்போய்விட்டது. அதிகமாக மண் இல்லாத பாறைப்ப குதியிலேயே விழுந்த விதையெல்லாம்... லேசாக வேர் விட்டு முளைக்க ஆரம்பித்து விட்டது.

அதற்கப்புறம் வேர் கிழேயும் ஆழமாய்: போகமுடியிவில்லை. மேலே சூரிய வெப்பமும் தாங்க முடியவில்லை. எல்லாம் காய்ந்து கருகிப் போய்விட்டது.

புதர்ப் பகுதியில் சில விதைகள் விழுந்தது இல்லையா...? முள்சொடிகள் காடாய் மண்டிக் போயிருந்தது...! அதனாலே முளைத்துவாற செடிக்கு அதிகமாய்ப் போய்ச்சு சரியாக வளர முடியவில்லை... விளைச்சலும் சரி இல்லை.

நல்ல நிலத்திலே விழுந்த விதைகள் மட்டும் நல்லா முளைத்தது... நல்லா வளர்ந்தது... விளைச்சலும் பிரமாதமாக இருந்தது.

இதைக் கதையாய் சொல்லிப்போட்டு கேட்க செவியுள்ளோர் கேட்கட்டும் என்றார் யோசு. ஆமாம் யோசு கடலில் நின்ற படகு ஒன்றில் உட்கார்ந்திருந்தார்.

கடற்கரையிலே ஏராளமான மக்கள் உட்கார்ந்திருந்தார்கள். அந்த சமயத்திலேதான் யோசு உவமைகள் மூலமாக மக்களுக்கு பல உண்மைகளை சொல்லிக்கொண்டிருந்தார். மக்கள் அந்தக் கதையை கேட்டுவிட்டு ஒன்றும் புரியாமலே முழிக்கிறார்கள். அதனைக் கவனித்த யோசு.... அந்த உவமையை விளக்க ஆரம்பித்தார்.

"இதிலே அந்த விதைக்கிறவர்தான் இறைவன். அவர் வார்த்தைகளை விதைக்கிறார். அந்த வார்த்தைகளை கேட்கிற மக்கள் அந்த... விழுந்த விதை [illegible]" மாதிரி நாலு வகையானவர்கள். சில பேர் பா[illegible]த்தில் விழுந்த விதைகள் மாதிரி... இறைவன் வார்த்தைகளை அவர்கள் கேட்கிறார்கள்.... ஆனால் தீய எண்ணங்கள்... செய்கைகள் மூலமாக விதைக்கப்பட்ட வார்த்தைகள் அழிந்துபோய்விட்டது.

இ[illegible]வன் வார்த்தைகளை கேட்டவுடனே மகிழ்ந்துபோய் [illegible]னே சில பேர் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். இவர்கள் எல்லாம் பாறைப்பகுதியிலே விழுந்த விதை மாதிரி! ஆனால், இவர்கள் எல்லாம் வேர் இல்லாதவர்கள். கொஞ்சக்காலத்திற்கு இறைவார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து நடப்பார்கள்.அதனாலேயே ஏதாவது இடைஞ்சல் ஏற்பட்டால் உடனே தடுமாறுவார்கள். தங்களிடம் இருக்கிற நல்ல பண்புகளை விட்டு விட்டு பாவ வழிகளுக்குப்போய்விடுவார்கள்.

முள் சொடிகளுக்கிடையே விழுந்த விதைகள் மாதிரி உள்ளவர்கள் யார் என்றால் இவர்களுக்கு உலகக் கவலை உண்டு.

செல்வத்தின் மீது மயக்கம் உடையவர்கள் .

உலக ஆசைகள் இவர்களுக்குள்ளே புகுந்து விடுவதனாலே ... அங்கேயிருக்கிற நல்ல பண்புகள் மறைந்து போய்விடும். அதனாலே அவர்களும் உபயோகம் இல்லாதவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

நல்ல மனிதர்கள் நல்ல நிலத்தில் விழுந்த விதைகளுக்கு ஒப்பானவர்கள் இவர்கள்-இறைவார்த் தையை கேட்கிறார்கள்... அதை ஏற்றுக்கொள்கி றார்கள். அவர்களும் நல்லபடியாக வாழ்கிறார்கள். அடுத்தவர்களுக்கும் உபயோகமாக இருப்பார்கள் இதுதான் யேசு சொன்ன விளக்கம்.

நல்ல வார்த்தைகளை கேளுங்கள்.

நல்ல வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளுங்கள் நல்லபடியாய் வாழுங்கள் அடுத்தவர்களுக்கும் உபயோகமாக இருங்கள் இது தான் பெரியவர்கள் எல்லாம் நமக்குச் சொல்கிற உபதேசம்.

ஒரு அப்பா தன் மகனுக்கு உபதேசம் பண்ணினார். இதோ பாருப்பா...நல்ல வார்த்தைகளை கேட்கனும் எப்போதுமே மகன்,அப்பா பேச்சைக் கேட்கிறது. நல்லது... நீ ஏதாவது ஒரு தப்பு பண்ணினால் என் தலையிலே ஒரு முடி நரைத்து வெள்ளையாய் போய் விடும்... நீ டிசய்கிற ஒவ்வொரு தப்புக்கும் என் தலையிலே ஒவ்வொரு முடி வெள்ளையாய் விடும்" அப்படி என்றார்.

பையன் யோசித்தான்... அப்புறம் சொன்னான்... அப்பா "இப்பதான் எனக்குப் புரியுது தாத்தா தலைமுடி பூராகவும் வெள்ளையாய் இருந்ததற்கு என்ன காரணம் என்கிறது அப்படி என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வத்தளையில் தமிழ் பாடசாலைக்கு ஒதுக்கப்பட்ட காணியில் சட்டவிரோதக் குடியேற்றம்; தடுத்து நிறுத்தக் கோரிக்கை

(கொழும்பு)

வத்தளை ஒலியமுல்லை பகுதியில் தமிழ் பாட சாலை அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணியில் சட்டவிரே ாத குடியேற்றம் நடைபெறுவதாகவும் அதனை தடுத்து



நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறும் ஐ.தே.க.வின் கொழும்பு மாவட்ட எம்.பி.தி.மகேஸ்வரன் மற்றும் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான பெ.சந்திரசேகரன் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாடசாலை அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணியில் சட்டவிரோதமாக குடியேறியுள்ளவர்களை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மகேஸ்வரன் எம்.பி.வத்தளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றினை நேற்று முன்தினம் செய்துள்ளார்.

தமிழ் பாடசாலைக்கான காணியில் குடியேறியுள்ள மக்களை வெளியேற்றும் வகையில் அவர்கள் மீது வழக்கு தொடருமாறும் மகேஸ்வரன் எம்பி.கோரியுள் ளார்.

பாடசாலைக் காணியில் அத்துமீறிய குடியேற்றம் தொடர்பாக இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற வுள்ள பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்குழு கூட்டத்தில் எடுத்துக்கூறவுள்ளேன். அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காவிடின் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வின் போது தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் இணைந்து கடும் எதிர்ப்பு நடவடிக்கை எடுக்கப்படும்.



இவ்விடயம் குறித்து வெளிநாட்டு தூதரங்களுக்கும் பொலிஸ்சேவை ஆணைக் குழுவுக்கும் அறிவிக்கவுள்ளேன.

இதேபோல் பாட சாலைக் கான காணியில் குடியேற்றத்தை தடுத்து நிறுத்துமாறு கோரி மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரனும் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வத்தளை தமிழ் பாடசாலைக் கட்டடத்திற்காக நான் ஒதுக்கிய காணியை வெளியார் ஆக்கிரமிப்பதை உடனடியாக தடுத்து நிறுத்தவேண்டும்.

நான் அமைச்சராக இருந்தபோது மேற்படி காணியை வத் தளை தமிழ் பாடசாலைக்குப் பெற்றுக்கொள்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 60 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. வத்தளையில் வசிக்கும் தமிழ்மக்களின் சனத் தொகைக் கேற்ப இங்கு உள்ள தமிழ் பாடசாலையை அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதற்காகவே இந்த நிதி யினை ஒதுக்கியிருந்தேன்.

இந்த அத்துமீறிய குடியேற்றத்தை உடனடியாக தடுத்து நிறுத்தாவிட்டால் அது தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் மாபெரும் வரலாற்று அநீதியாகவே அமையும். (அ)

## உற்சவகாலத் திருட்டுக்களை தடுக்க விசேட ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)



நல்லூர் உற்சவகாலங்களில் ஆலய சூழலில் வீதித் தடைகள் போடப்பட்டுநுழைவு அனுமதி அட்டை வழங்கப்பட்டவாகனங்களை உட் செல்லஅனுமதியளிக்கப்பட்ட போதும் நேற்று முன்தினம் அரசசார்பற்ற நிறுவனத்தின் வாகனமொன்று தன்னுடைய செல்வாக்கினைப் பயன் படுத்தி ஆலய வீதியில் உட்பிரவேசித் தது.

இச்சம்பவம் ஆலய உற்சவ நேரத் தில் இடம்பெற்றுள்ளதாகவும் இவ்வாறான செயற்பாட்டிற்கு இடம் கொடுக்காது எல்லோருக்கும் ஒரே நடைமுறையினை கையாள வேண்டும் என அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்றைய தினம் யாழ். மாநகர சபை ஆணையாளருடன் தொடர்பு கொண்டபோது இச் செயற்பாட்டிற்கு தான் கவலை தெரிவிப்பதாகவும் இவ் வீதித் தடைக்குள் அமைந்துள்ள யூ.என்.எச்.சி.ஆர். சிறுவர் பாதுகாப்பு குழு சேவாலங்கா ஆகிய மூன்று அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மாத்திரம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் நல்லூர் உற்சவம் மிக சிறப்புடனும் அமைதியான முறையிலும் இடம் பெற் றுள்ளதாகவும் இதே வேளை, சில திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இது தொடர்பாக தான் சில விசேட ஏற்பாடுகளைச் செயற் படுத்தவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ-133)

## மின்சாரத் திருட்டால் உடுப்பிட்டியில் பல மின் உபகரணங்கள் நாசம்

(பருத்தித்துறை)

உடுப்பிட்டி நாவலடிப் பிரதேசத்தில் திருட்டு மின்சா ரம் பாவனையால் 10 க்கும் அதிகமான மின்பாவனையாளர்களின் மின் உபகரணங்கள் எரிந்து நாசமாகியுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

ரீ. வீக்கள், றேடியோக்கள், குளிர் சாதனப் பெட்டிகள், நீரிறைக்கும் மோட்டார்கள் என்பனவே எரிந்து நாசமாகியுள்ளன . கடந்த சனிக்கிழமை இம் மின் விபத்து இடம் பெற்றுள்ளது.

இப் பகுதியில் திருட்டு மின்பாவனையாளர் ஒருவரின் திருட்டு முயற்சியால் மின் விநியோக நியுட்டர் கம்பி அறுந்து தொங்கியே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இதனாலேயே மின் பாவனையாளர்களின் மின் உபகரணங்கள் எரிந்து நாசமாகியுள்ளன .

இம்மின் விபத்து சம்பந்தமாக இலங்கை மின்சார் சபை பருத்தித்துறை அலுவலகத்துக்கு தகவல் கிடைத்ததும் ஸ்தலத்துக்கு விரைந்த மின்சார சபை உத்தியோகத்தர்கள் மின் விநியோகத்தை சீர் செய்து மின் பாவனையாளர்களுக்கு ஒழுங்கான மின் விநியோகத்தை மேற் கொண்டனர்.

இலங்கை மின்சார சபை பருத்தித்துறை மின் அத்தியட்சகர் என். இராமலிங்கமூர்த்தி திருட்டு மின்பாவனையாளர்களை கடுமையாக எச்சரித்துள்ளார். (அ-52)

## பெயர்பலகைகளை அகற்றுமாறு படையினர் வற்புறுத்தல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் கடைகளின் பெயர்ப்பலகைகளை அகற்றும்படி கடை உரிமையாளர்களை மிரட்டி வருவதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கிளைமோர் வெடித்ததாகக் கூறி இத்தகைய செயற்பாட்டை மேற் கொண்டுள்ளார்கள்.

உடனடியாக கடைகளில் பெருத்தப்பட்டு இருக்கும் பெயர்ப்பலகைகளை அகற்ற வேண்டும் என படையினர் கடந்த வாரம் இதே போன்று படையினர் வீட்டு உரிமையாளர்களை கொண்டு மரங்களை தறிப்பித்ததாகவும் தெரி விக்கப்படுகிறது. (அ)

## தேங்காய்விலை வீழ்ச்சி

ஊர்காவற்றுறைப் பகுதியில் என்றுமில்லாதவாறு தேங்காய் கள் வருவதால் தேங்காய் ஒன்று 12 ரூபாய் முதல் 18 ரூபாய் வரை விற்கப்படுகின்றது. முன்பு தேங் காய் ஒன்று 40 ரூபாய் வரை விற்று வந்ததாகவும் ஊர் காவற்றுறை உணவகங்கள்,வாழைப்பழக்கடை ஆகிய வற்றிலும் தேங்காய் விற்பனைகள் நடைபெறுவதாக வும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (அ-72)

## துவிச்சக்கரவண்டி இலக்கத்தகடு

வல்வெட்டித்துறை நகரசபை துவிச்சக்கர வண்டிகளுக்கான இலக்கத் தகடுகளை விநியோகித்து வருகின்றது. பாடசாலை மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டி இலக்கத் தகடுகளை பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று விநியோகித்து வருகின்றது.

இத் துவிச்சக்கர வண்டிகளுக்கான இலக்கத் தகடுகள் விநியோகிக்கும் பணி நிறுத்தப்பட்டதும் துவிச்சக்கர வண்டி களுக்கான இலக்கத்தகடுகள் இல்லாதவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென்று வல்வெட் டித்துறை நகரசபைச் செயலாளர் கே. அமிர் தலிங்கம் தெரிவித்தார். (அ-52)

## உள்ளூராட்சி சபைகளுக்கு ஜீ.ரீ.சற் உபகரணம் வழங்கல்

(பருத்தித்துறை)

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் 33 உள்ளூராட்சி சபைகளுக்கு அலுவலக உபகரணங்களை வழங்கியுள்ளது.

ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் இத்திட்டத்தின் கீழ் 54 கணனிகள் , 54 யூபி.எஸ்கள், 27 பிறின்டர்கள் , 27 ஸ்க்காணர்கள், 27 றோனியோ, ஸ்ற்ரென்சில் இயந்திரங்கள், 33 போட்டோ ஸ்ராற்இயந்திரங்கள், 54 அலுவலக மேசைகள் உள்ளூராட்சி சபைகளின் தேவைகளுக்குகேற்ப வழங்கப் பட்டுள்ளன. (அ-52)

# இடைத்தங்கல் முகாம்களில் இன்னலுறும் மக்கள்

சுனாமி பேரலை காரணமாக நிர்க்கதியாக்கப்பட்ட முல்லைத்தீவு மக்கள்தங்கள் இயல்புவாழ்க்கைக்கு திரும்புவதற்கு அவர்களுக்கு இன்று வரை நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படாததால் தொடர்ந்தும் அவர்கள் இடைத்தங்கல் முகாம்களிலேயே தங்கியுள்ளார்கள்.

அரசசார்பற்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் வீடமைப்புத் திட்டங்களில் இன்று வரை 150 வரையான வீடுகளே உத்தியோகபூர்வமாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தங்களுக்கான வீடுகள் அமைக்கப்பட்டு தாங்கள் எப்போது முகாம் வாழ்க்கையில் இருந்து விடுபடுவோமோ என அவர்கள் ஏங்கியவண்ணம் உள்ளனர்.

முல்லைப் பட்டணத்தில் உள்ள 18 கிராம சேவையாளர் பிரிவில் 5 ஆயிரத்து 900 குடும்பங்களைச் சேர்ந்த மக்களுக்கான அடிப்படை வசதிகள் அனைத்தும் தொடர்ந்தும் மிகச் சிறப்பான முறையில் கரைதுரைப்பற்றுபிரதேசசபையின் விசேட ஆணையாளரும்செயலாளருமான, எல்.கிருஷ்ணபிள்ளையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நிர்க்கதியாக்கப்பட்ட 5 ஆயிரத்து 900 குடும்பங்களில் 2 ஆயிரத்து 225குடும்பங்கள் 21 இடைந்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மிகுதியாக உள்ளோர் தொடர்ந்தும் உறவினர் வீடுகளிலேயே தங்கியுள்ளார்கள்.

இவர்களுக்கான மலசலகூட, மின்சார, கழிவகற்றல் போன்ற சேவைகளுடன் குடிநீர் உவராக உள்ள பகுதிகளுக்கு நாளாந்தம், 4 இலட்சத்து 50 ஆயிரம் லீற்றர் தண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்தது. தற்போது இதற்கான நிதியை மாவட்டச் செயலகம் குறைந்துள்ளதால் இப்பொழுது நாளாந்தம் 2 ஆயிரம் லீற்றர் தண்ணீரையே விநியோகிக்கக்கூடியதாக இருப்பதாக விசேடஆணையாளர்திரு.கிருஷ்ணபிள்ளை கவலை தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இந்த இடைத்தங்கல் முகாம்களில் மலசலகூடக் கழிவகற்றல்முறைகள்கலிஎம்பியர்மூலம் அகற்றப்படுவதால் மலசலகூடங்கள்மிகவும் நல்லமுறையில் பேணப்பட்டு வருகின்றன. அங்கேசுகாதாரம் நல்ல முறையிலே பேணப்படுவதால் நோய்கள் தொற்றும் அபாயம் எதுவுமே இல்லையென சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

எது எப்படியிருந்த போதிலும், சகலவசதிகளுடன்சொந்தவீடுகளில் வாழ்ந்த இம் மக்கள் இன்று சுனாமிப் பேரலை காரணமாக தங்கள் சொத்துக்களை மட்டுமல்ல, சுகங்களை உற்றார் உறவினரை எல்லாம் இழந்து துன்பப்படும் வேளையில் தொடர்ந்தும் நாம் இந்த முகாம்களிலேயே வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளோம் என கவலை தெரிவித்தனர். (து-128)

# முல்லைத்தீவுக்கு மீண்டும் மின்சாரம்

சுனாமி அனர்த்தத்தின் பின், முல்லைத்தீவு நகரத்துக்கு கரைதுரைப்பற்று பிரதேச சபையால் மீண்டும் தொடர்ந்தும் பாரிய மின்பிறப்பாக்கிகள் மூலம் மின் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

பிரதேச சபையால் சேவை மனப்பான்மையுடன் இச்சேவையை நிறைவேற்றிவருவதால் மாதாந்தம் பல இலட்சம் ரூபாய்களை இழக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதால் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய தவிர்க்க முடியாத ஒரு நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக பிரதேச சபையின் செயலாளரும், விசேட ஆணையாளருமான எவ்.கிருஷ்ண பிள்ளை கவலை தெரிவித்துள்ளார்.

இந்த மின்விநியோகமானது காலை 8.30 மணி தொடக்கம் இரவு 10.00 மணிவரை தொடர்ச்சியாக விநியோகிக்கப்பட்டு வருகின்றது. 132 வீடுகளுக்கும் 10 வியாபார நிலையங்களுக்கும், ஏனைய அரசாங்க அலுவலகங்களுக்கும் மின்சாரம் விநியோகம் செய்யப்படுகின்றது. அலகு ஒன்றிற்கு ரூபாய் 10 ஆக உள்ள கட்டணத்தை மேலும் 5 ரூபாய் அதிகரிப்பதன் மூலம் நட்டத்தின் ஒரு பகுதியை ஈடு செய்ய முடியுமென எதிர்பார்ப்பதாக விசேட ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (து-128)

## காணாமல் போகும் கால் நடைகள்

ஊர்காவற்றுறை பகுதியில் அடிக்கடி ஆடு,மாடு போன்ற கால் நடைகள் காணாமல் போகின்றதாக கால் நடை வளர்ப்போர் பொலிஸில் புகார் செய்துள்ளனர்.

கடந்தவாரம் பட்டியிலுள்ள தனது பசுக்கன்றைக் காணவில்லை என்று பருத்தியடைப்பை சேர்ந்த ஆ.நாகராசா என்பவரும் ஊர்கா வற்றுறை மேற்கு வீதியைச் சேர்ந்த திருமதி யோசவ் மேரி செலக்ஸ் ரீனா என்பவரும் ஊர்காவற்றுறைப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (அ)

## இராசி பலன்

**01.08.2006**
**(ஆடி 16, செவ்வாய்க்கிழமை)**
**சப்தமி முன்னிரவு 10.17 மணிவரை**
**சித்திரை பிற்பகல் 5.43 மணிவரை**
**இராகுகாலம் 3.03-4.33 மணிவரை**
**சுபநேரம் 10.33-12.03 மணிவரை**
**மூன்றாம் ஆடிச் செவ்வாய்**

| | |
|---|---|
| மேடம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், அபூர்வ சந்திப்பு, போசன சுகம், தொழில் நன்மை. |
| இடபம் | உடல்நலம், சத்துருஜெயம், முயற்சி கைகூடும், தொழில் விருத்தி. |
| மிதுனம் | வியாபார விருத்தி, சிறுவியாதி, குடும்பக் கவலை, சகோதரர் உதவி. |
| கடகம் | வீண் பயம், கல்வியில் ஆர்வம், உஷ்ண நிலை, மனச்சஞ்சலம். |
| சிங்கம் | பிரயாண நன்மை, நல்லமுயற்சி, பொருள் சேர்க்கை, உறவினர் வருகை. |
| கன்னி | மாதர் நட்பு, முயற்சி தாமதம், பெரியோர் உதவி, திடீர் நன்மை. |
| துலாம் | நல்ல முயற்சி, நிலைமாற்றம், சயன சுகம், போசன நன்மை. |
| விருச்சிகம் | அமைதிக்குறைவு, சுபசெலவு, முயற்சி தாமதம், பித்த ரோகம். |
| தனுசு | இஷ்ர சித்தி, பெருமையடைதல், பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி. |
| மகரம் | தூரதேசச் செய்தி, தொழில் நன்மை, உடல்நலம், மேன்மை. |
| கும்பம் | புதிய திட்டமிடல், திடீர் பயணம், ஆரோக்கியக்குறைவு, ஆழ்ந்தசிந்தை. |
| மீனம் | அபகீர்த்தி, காரிய தடங்கல், வாகன பயம், ஆரோக்கியக்குறைவு. |

- வளவன்

## சமுர்த்தி பண முத்திரை

கோவில் குடியிருப்பு J/301 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட சமுர்த்தி முத்திரைப் பயனாளிகள் சமுர்த்தி பண முத்திரைக்குரிய படிவத்தில் 3.8.2006 ஆம் திகதிக்கு முன்பு கையொப்பம் இடும்படியும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பணிமனைக்கு வரும்போது சமுர்த்தி தனிநபர் புத்தகத்தையும் ஆள் அடையாள அட்டை, சமுர்த்தி முத்திரை ஆகியவற்றையும் கொண்டுவந்து J/301 கோயில் குடியிருப்பு கிராம சேவையாளர் பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தரை சந்திக்குமாறும் வேண்டப்படுகிறார்கள். (அ-79)

## பற்றாக்குறையுடன் சாவ.வைத்தியசாலை

தென்மராட்சியில் தற்போது பெரிய அளவான வைத்தியசாலையாக இருப்பது சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையே ஆகும். இங்கு வரும் நோயாளர் தொகையோ நாளாந்தம் அதிகரித்தவண்ணம் இருக்கிறது. சலரோகம், காய்ச்சல், முட்டு போன்ற பல வருத்தங்கட்கும் சிகிச்சை பெற நோயாளர்கள் இங்கு பல இடங்களிலும் இருந்து வருகிறார்கள். ஆனால் இங்கு ஊழியர்கள் பற்றாக்குறையால் நோயாளர்கள் பலவித சிரமங்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.


வைத்திய அதிகாரியிலிருந்து சிற்றூழியர் வரை ஆளணி பற்றாக்குறையால் இந்த சிரமங்களை நோயாளர்கள் எதிர்கொள்வதுடன் நோயாளர்களின் பொன்னான நேரமும் வீணடிக்கப்படுவதாக நோயாளர் தரப்பிலிருந்து அறிய முடிகிறது. கடந்த சில மாதங்கட்கு முன்பு சில சிற்றூழியர்கள் சுகாதார பகுதியால் நியமிக்கப்பட்டிருந்தும் சிற்றூழியர் பற்றாக்குறை இன்னமும் தீரவில்லை எனவும் அறியப்படுகிறது. எதிர்வரும் மாரி காலத்தில் மக்களிடையே நோய்களின் தாக்கம் கூடுதலாக இருக்கும் என எதிர்பார்ப்பதால் இக்குறைகள் தீர உரியவர்கள் கவனம் எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இத்துடன் தற்போது போதிய கட்டிட வசதிகள் கூட இங்கில்லாமல் இருப்பதும் மற்றோர் குறைவாகும் எனவும் தெரிவிக்கிறார்கள். (அ-70)

## உள்ளூராட்சி ஆணையாளர் நியமனம்

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக எஸ்.இளங்கோ உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் வடக்கு-கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராகப் பணியாற்றியவராவார்.வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளராக பதவி வகித்த எஸ்.சபாபதிப் பிள்ளை சேவையிலிருந்து ஓய்வுபெற்றதையடுத்தே இளங்கோ அப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். (அ-52)

## நல்லூரான் திருவடிக்கு இன்று மூன்றாம் திருவிழா



## கலாசார ஆடைகட்டி கந்தனைத் தொழுவோம் வாரீர்

கலாசார ஆடை அணிகளுடன் கந்தனைத் தொழுவோம் வாரீர்
காதலால் அவனருளைப் பெறுவோம் வாரீர்
உலாவரும் போதெல்லாம் அவன்புகழே பேசுவோம் வாரீர்
ஒளிஞான வேலவனைத் நாளும் துதிப்போம் வாரீர்
நிலவிடும் துயரதை நிறுத்திட கேட்போம் வாரீர்
நிரந்தர அமைதியை பெற்றிட தொழுவோம் வாரீர்
அழகான நல்லூரான் திருவடியைப் பெறுவோம் வாரீர்
அவனியிலே நலமான வாழ்வதை அவனிடம்
பெறுவோம் வாரீர்

*மதுரகவி .காரை .எம்.பி அருளானந்தன்*

## தீர்வொன்று தருவாய் நீயே!

சங்கரன் மைந்தனே! சண்முக சுந்தரா!
ஐங்கரன் தம்பியே மண்ணினில் - எங்கும்
அமைதி நிலவிடத் தீர்வொன்று தந்தருள்
உமையவள் பாலனே நீ!

*நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்*

## நல்லூர் வீதியிலே

*பல்லவி*

*எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்*
*இடர்கள் எல்லாம் போமே.*

*அநுபல்லவி*

*அந்நாளில் ஆசான் அருந்தவஞ் செய்த இடம்*
*அது வாதலாலே அதிசயம் மெத்த உண்டு (எந்நாளும்)*

*சரணங்கள்*

*வேதாந்த சித்தாந்தம் கற்றதனா லென்ன*
*வேடிக்கைக் கதைகள் பேசினா லென்ன*
*வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்*
*வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே - (எந்நாளும்)*

*சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்*
*நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்*
*பத்திசெய் உத்தமர் பரவும் நல்லூரில்*
*நித்தியம் வந்து பார்த்தால் முத்தி நிச்சயமே - (எந்நாளும்)*

*நா.கௌரி*

## தமிழினத்தைக் காத்திடு!

ஏறுமயில் ஏறிவரும் வேலனே
ஈசனுமை பெற்றெடுத்த பாலனே
ஆறுபடை வீடமர்ந்த அழகனே
ஆனைமுகன் தம்பியான குமரனே
கூறுபட்டுத் தமிழினமே அழிவதோ
கோலமயில் மீதுவந்து வழிவிடு
வீறு கொண்டு வேலொடு நீ விரைந்திடு
வினைகளோட்டித் தமிழினத்தைக் காத்திடு!

*கவிஞர். நயினை இராகுலன்*

## நாவலர் மணிமண்டபத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)


இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் உற்சவ காலத்தினை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'ஆன்மீக சிந்தனையுடன் கூட்டுப்பிரார்த்தனை' இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வலிகாம அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் 'பாடும் பணியே பணியாக அருள்வாய்' என்னும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவினை சீ.சசீவன் நிகழ்த்துவார். கோண்டாவில் ஸ்ரீசிவசுவாமி அம்பாள் அறநெறிப்பாடசாலை மாணவர்களது கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளது. (து-133)

# கணினிக் கல்விப் பகுதி


## இணைய இணைப்பை ஏற்படுத்தும் முறை (12)

இணைய இணைப்பை ஏற்படுத்தும் போது தொலைபேசி வழங்குனரால் தரப்பட்ட யூசர் நேம் மற்றும் பாஸ்வேர்ட்டை கொடுத்தே இணையத்தில் நுழைந்து கொள்ள முடியும். யூசர் நேம் மற்றும் பாஸ்வேர்ட் இல்லாத சமயத்தில் நமது தொலைபேசி வழங்குனரிடம் இணைய இணைப்பை பெற்றுக் கொள்ள வேண்டும். யாழ்ப் பாணத்தில் இரண்டு இணைய இணைப்பே தற்பொழுது வழங்கி வருகிறது. (SLT NET, SUNTEL)




நேம் மற்றும் பாஸ்வேர்ட் கொடுத்து டயல் செய்யும் விண்டோவாகும்.

இணைய இணைப்பை ஏற்படுத்துவது எப்படி எனப் பார்ப்போம் முதலில் உங்களது மொடத்தையும் தொலைபேசி இணைப்பையும் ஒழுங்காக தொடுக்கப்பட்டுள்ளதா? External Modem என்றால் மொடத்தை இயக்க வும் பின் Start - Connect To - SLT or Suntel (அதாவது இணையத்துக்கான இணைப்பை ஏற்படுத்தும் சிறிய விண்டோ) சற்று நேரத்தின் பின் இணைப்பு கிடைத்து விட்டது என்றால் ராக்ஸ் பாரில் இணைப்பு கிடைத்து விட்டது என்பதை தெரிவிக்கும். (இரு கணினி இருப்பது போன்ற அடையாளம்) பின் Internet Explorer ஐ திறந்து விரும்பிய இணையத்தளத்திற்கு பிரவேசிக்க முடியும். எத்தனை கே.பி.எஸ் இல் மொடம் தொழிற்படுகிறது, இணையத்தை எத்தனை மணித்தியாலம் பாவித்துள்ளோம் போன்ற பல விபரங்களை அறிய ராஸ்க் பாரிலுள்ள இரு கணினியின் அடையாளத்தின் மீது கிளிக் செய்தால் விபரம் மொனிட்டரில் தெரிவிக்கும்.







*இணைய இணைப்பு இரு வகைப்படும்*

1. Card Connection:- இது மீள் நிரப்பும் அட்டையாகும். அதாவது எஸ். எல். ரீ நெற்றில் தான் இந்த வசதியுள்ளது. 1000 ரூபா, 500 ரூபா பெறுமதிகளில் அட்டை கிடைக்கும். மாதாந்த வாடகை எதுவுமில்லை. பாவனை நேரத்திற்கு மட்டுமே கட்டணம் அறவிடப்படும்.
2. Package Connection :- இது தொலைபேசி வழங்குனரால் நமக்கு யூசர் நேம் மற்றும் பாஸ்வேர்ட் வழங்கப்படும். மாதாந்த வாடகை அறவிடப்படும். தொலை பேசி வழங்குனரை ISP – Internet Service Provider என அழைப்பார்கள்.

## வாரம் ஒரு இணையத்தளம்

www.kokuvilhinducollege.com யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் உத்தியோகபூர்வ இணையத்தள முகவரியே இதுவாகும். இத்தளத்தில் பாடசாலையில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளின் புகைப்படங்கள் மற்றும் பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களின் விபரங்களை படங்களுடன் பெற்றுக் கொள்ளலாம். அழகிய தோற்றத்துடன் இத்தளம் காட்சியளிக்கிறது. அத்துடன் பழைய மாணவர் சங்கம், பாடசாலையிலுள்ள கழகங்களின் விபரங்களையும் இத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இரு இணையத்தள முகவரிகள் உள்ளன.

www.kokuvilhinducollege.com மற்றும் www.kokuvilhindu.net ஆகியவையேயாகும்.


### சில பயனுள்ள இணையத்தள முகவரிகள்

www.tamilcinema.com
www.slt.lk/sltnet.lk
www.wtrfm.com (உலகத் தமிழர் வானொலி)
www.kathala.com (பல்சுவைத் தளம்)
www.nilavu.com (பல்சுவைத் தளம்)
www.oc.ac.lk (இலங்கை திறந்த பல்கலைக் கழகம்)
www.dpmco.com (மோட்டார் சைக்கிள் தகவல்கள்)
www.education.gov.lk (இலங்கை கல்வித் திணைக்களத்தினுடைய இணையத்தளம்)
www.ibctamil.co.uk (வானொலி)
www.pdn.ac.lk (பேராதெனியா பல்கலைக் கழகம்)
www.jobsnet.lk (இலங்கை வேலை வாய்ப்புக்கள்)
www.goldentamil.com (பல்சுவைத் தளம்)
www.tamilbeat.com (தமிழ் பாடல்களை பதிவிறக்கம் செய்யும் தளம்)
www.tamilmasala.com (பல்சுவைத் தளம்)
www.123greeting.com (மின் வாழ்த்து அட்டைகளை அனுப்பலாம்)
www.wow.lk (பல்சுவைத் தளம்)
www.mp3.com (எம்பி 3 பாடல்களை பதிவிறக்கும் தளம்)
www.virakesari.lk (இணையத்தளம் மூலம் பத்திரிகை படிக்க முடியும்.)
www.kokuvilhindu.net (கொக்குவில் இந்துக் கல்லூரியின் இணையத்தளம்)
www.sunnetwork.in
www.amazon.com (இணையத் தளம் மூலம் புத்தகங்களை வாங்க முடியும்)
www.icta.lk (தகவல் தொழினுட்ப முகவர் நிலையம்)
www.gov.lk (அரச திணைக்களங்களின் விபரங்கள், சுற்று நிருபணங்கள் இத்தளத்தில் பார்வையிட முடியும்)
www.download.com (நமக்குத் தேவையான மென்பொருட்களை இத்தளத் திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக் கொள்ளலாம்)
www.centralbanklanka.org (இலங்கை மத்திய வங்கி)
www.boc.lk (இலங்கை வங்கி)

## கணினியின் அமைப்பு (Computer Organization)

கணினியின் அடிப்படை அமைப்பை பின்வருமாறு வகைப்படுத்தலாம். அவையாவன:

1. உள்வாங்கி அமைப்பு
2. வெளியீட்டு அமைப்பு
3. பிரதான நினைவகப் பகுதி
4. களஞ்சியப்படுத்தும் அமைப்பு
5. தரவு நிரற்படுத்தும் அமைப்பு



உள்வாங்கி அமைப்பானது கணினிக்கு தகவல் கட்டளைகள் வழங்குவதற்காக பயன்படுத்தும் வன்பாகமாகும். இவற்றை கணினியிலிருந்து வேறுபடுத்தி பிரித்து வைக்கப் பயன்படும்.

உள்வாங்கி அமைப்புகளிற்கு உதாரணங்களாக கீபோர்ட், மௌஸ், ஸ்கானர் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

வெளியீட்டு அமைப்பானது கணினியிலிருந்து தரவுகளை வெளியில் எடுப்பதற்கு பயன்படும். இவற்றை கணினியிலிருந்து வேறுபடுத்த முடியும். இதற்கு உதாரணங்களாக பிரின்டர், மொனிட்டரைக் குறிப்பிட முடியும்.

பிரதான நினைவகப் பகுதி அதாவது மெயின் மெமரி நாம் ரைப் செய்ப வற்றை நினைவுபடுத்தி வைத்திருக்கும் பகுதி. களஞ்சியப் படுத்தும் அமைப்பாக வுள்ளது.

நினைவகப் பகுதியில் ஒவ்வொரு ரைவ் ஆக இருக்கும். உதாரணமாக Drive A, C, D, G என வகைப்படுத்த முடியும்.

(வளரும்)

தொகுப்பு :
சி.வாமதீபன்
vamatheepan@yahoo.com


*வாசகர்களே !*

கணினி சம்பந்தப்பட்ட சந்தேகங்களை எமக்கு அனுப்பி வைத்தால் அதற்கு பதிலளிக்க நாம் தயாராகவுள்ளோம். கேள்விகள் இன்ரநெற், இமெயில் மற்றும் எம்.எஸ்.ஒபீஸ் சார்ந்தவையாக இருக்கலாம்.

கணினிக் கல்வி தொடர்பான அபிப்பிராயங்களும் எதிர்பார்க்கின்றோம். அதுமட்டுமல்ல கணினி சம்பந்தப்பட்ட ஆக்கங்களை அனுப்பி வைத்தால் அதை பிரசுரிக்க நாம் தயாராகவுள்ளோம்.

உங்கள் கேள்விகளையோ அல்லது கணினிக் கல்வி தொடர்பான ஆக்கங்களை அல்லது அபிப்பிராயங்களை அனுப்ப வேண்டிய முகவரி:

*வலம்புரி*
*'கணினிக் கல்விப் பகுதி'*
*இல.03, 2ஆம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பக்க வடிவமைப்பு :

கே.ரி.சாரங்கன்
கொக்குவில் இந்துக் கல்லூரி
E-Mail : kt.sarangan@gmail.com

# கர்மவீரர் காமராஜர்

## மீள்பார்வை 41

முருக-தனுஷ்கோடி



கல்வித் துறையில் காமராஜ் ஆற்றிய பணிகள் , அவரது புரட்சிகரமான திட்டங்கள் , மக்களிடையே கல்வி ஆர்வம் கரைபுரண்டு ஓடச் செய்துவிட்டன. அதன் பலனாக , இன்று தமிழகத்தில் ஆரம்பப் பள்ளிகள் இல்லாத கிராமங்களே கிடையாது என்ற பெருமிதமிக்க நிலை ஏற்பட்டுவிட்டது. 5 மைல் தூரத்திற்கு ஒரு உயர்நிலைப் பள்ளிவீதம், சகல நவீன வசதிகளுடன் அமைக்கப்பெற்றுவிட்டன.

பள்ளிகளின் எண்ணிக்கையைப் பெருக்கி அதேசமயம் கல்வித் தரத்தை பாதுகாக்கவும், உயர்த்தவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. கல்வித் தரத்தை உயர்த்த பள்ளிக் கூடங்களின் வேலை நாட்கள் எண்ணிக்கை 180 என்று இருந்தது. 200 ஆக உயர்த்தப்பட்டது. வீணான விடுமுறைகள் குறைக்கப்பட்டுவிட்டன. பல தரப்பட்ட திறன்களுக்கும் வாய்ப்பளிக்க வசதியாக பாடத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டன. இரு கூறு வகுப்புகள் பல துவங்கப்பட்டன. இதன் விளைவாக 45 பலநோக்கு பள்ளிகள் துவக்கப்பட்டன. இரண்டாம் திட்டக் காலத்தில் 191 பள்ளிக்கூடங்கள் பலநோக்கு பள்ளிகளாக மாறின. 286இருகூறு வகுப்புகள் தொடங்கப்பட்டன. விஞ்ஞான பாடங்களை நன்றாகப் போதிக்க , நவீன இரசாயன பரிசோதனை சாலைகளும் , நூல் நிலையங்கள் திறம்பட இருக்குமாறு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தவும் , அவர்கள் தங்கள் இதயங்களில் ஆர்வம் ஏற்படுத்தவும், முதன் முதலாக சம்பள உயர்வு அளித்தார் காமராஜ் . ஒரே ஆண்டில் 17 ரூபாய் சம்பள உயர்வு அளிக்கப்பட்டது. ஆசிரியர்களுக்கு இதுவரை இல்லாதிருந்த , பென்சன் , பிராவிடண்ட் பண்ட் (கட்டாய) இன்சூரன்ஸ் ஆகிய மூன்று நன்மைகளை அளிக்கும் புரட்சித் திட்டத்தையும் அமுல்படுத்தினார். இந்தியாவில் முதன்முதலில் இத் திட்டத்தைக் கொண்டுவந்த பெருமை காமராஜிற்கே உரியது. இத்துடன் குடும்ப பென்சன் திட்டமும் ஆசிரியர்களுக்கு கொண்டுவரப்பட்டது. கிராமங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கு அரசாங்கமே வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் வகுக்கப்பட்டது. இதற்கென மூன்றாவது திட்டத்தில் 25 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது. 750 வீடுகள் கட்டித்தர திட்டமிடப்படப்பட்டது.

வைத்திய கல்லூரி , எஞ்சினியரிங் கல்லூரி , விவசாய மற்றும் தொழிற் கல்லூரிகளில் படிக்கும் தகுதியுள்ள ஏழை மாணவர்களுக்கு வட்டியில்லாத கடன் உதவியளிக்கவும் ஏற்பாடு செய்தார். இதனால் எஞ்சினியரிங் மற்றும் மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டுதோறும் மாணவர் எண்ணிக்கை அதிகரிக்க ஆரம்பித்தது. மேலும் , ஆஸ்பத்திரிகளில் நர்ஸ் பயிற்சி வசதிகளும் அதிகரிக்கப்பட்டன.

காமராஜ் ஆட்சிக் காலத்தில்தான் அரசாங்க கலைக் கல்லூரிகளின் எண்ணிக்கை மளமளவென்று உயர்ந்தது. காமராஜ் ஆட்சிக்காலத்தில் 2 உடற்பயிற்சிக் கல்லூரிகளும் , 10 ஆசிரியர் பயிற்சி கல்லூரிகளும் , 39ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளும் திறக்கப்பட்டன.தமிழ் நாட்டில் , மேலும் ஒரு பல்கலைக்கழகம் ஆரம்பிக்கவும் காமராஜ் சர்க்கார் ஆவன செய்தது.

## விவசாய முன்னேற்றம்

காமராஜ் காலத்தில் செய்துமுடிக்கப்பட்ட முக்கியமான பெரிய நீர்ப்பாசன திட்டங்கள் விவசாயிகள் வயிற்றில் பால் வார்த்தன. கீழ்பவானி , மணிமுட்டாறு , காவிரி டெல்டா , ஆரணியாறு , வைகை நீர்த்தேக்கம் , அமராவதி , சப்தனூர் , கிருஷ்ணகிரி , புல்லம்பாடி , வீடூர் . அணைத்தேக்கம் , பரம்பிக்குளம் , நெய்யாறு ஆகியவையாகும். கோவை மாவட்டத்தில் உள்ள கீழ்பவானித் திட்டத்திற்கு ரூபா 10கோடி செலவிடப்பட்டது. இதனால் 2 , 07 , 000 ஏக்கர்களில் புதிதாக விவசாயம் நடந்து வருகின்றது.

திருநெல்வேலி மாவட்டத்தில் கட்டப்பட்ட மணிமுட்டாறு அணைக் கட்டினால் 20 , 000 ஏக்கர்கள் பயன் அடைந்தன. இத் திட்டம் 5.05 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டதாகும்.

சேலம் மேட்டூர் கால்வாய் மூலம் 45 ,000 ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசனம் பெற்றுப் பயனடைகின்றது. இதேமாவட்டத்தில் அமைந்துள்ள மற்றொரு திட்டம் கிருஷ்ணகிரி திட்டம்.வைகை சாத்தனூர் திட்டங்கள் முறையே மதுரை , வட ஆற்காடு மாவட்டங்களில் அமையப்பெற்று பல ஆயிரக் கணக்கான ஏக்கர்களுக்கு நீர்ப்பாசன வசதியைஅளித்துள்ளன.

பரம்பிக்குளம் , ஆரணியாறு திட்டத்திற்கு காமராஜ் காலத்தில் 30கோடி ரூபா செலவிட திட்டமிடப் பட்டது. இது கோவை மாவட்டத்தைச் செழிக்கச் செய்ய வகை செய்தது.

### *சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்*

1957-1961இல் 1.628கோடி சிறிய நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் சீர்ப்படுத்தப்பட்டுள்ளன. வடிகால்கிணறுகள் 2 , 000 வரை ஏற்படுத்தப்பட்டன. மேலும் , கிணறுகள் வெட்ட நீண்டகாலத் தவணைக்கடனும் , 25 சதவீதம் மான்ஜயமும் அளிக்க ஏற்பாடானது. இதைத் தவிர மானாவாரி நிலம் உடைய விவசாயிகளுக்கு , ஆயில் எஞ்சின்கள் , மின்சார பம்பு செட்டுகள் தவணை முறையில் தரும்படியும் ஏற்பாடு செய்யப்பட்டது.

காமராஜரின் காலத்தில் விவசாயம் செய்யப்படும் பூமியின் அளவு 150இலட்சம் ஏக்கராகும். இதில் மூன்றில் ஒரு பகுதி 50இலட்சம் ஏக்கர் நிலங்கள் நிலையான நீர்ப்பாசன வசதி பெற்றன.

### *தொழில் வளர்ச்சி*

தொழில் வளர்ச்சி ஏற்பட்டதும் , காமராஜரின் காலத்தில்தான் எனக் கூறவேண்டும்.கோடிக் கணக்கான ரூபாய் மூலதனம் போட்டுப் பல தொழிற்சாலைகள் இவர் காலத்தில் தான் உருவாயின. நெய்வேலி நிலக்கரித் திட்டம் , நீலகிரி கச்சா பிலிம் தொழிற்சாலை , கிண்டிரண சிகிச்சைக் கருவித் தொழற்சாலை , சர்க்கரை ஆலைகள் , சோடா உப்புத் தொழிற்சாலைகள் , சிமெண்ட் தொழிற்சாலைகளும் ஆவடி ரயில்வே வாகன் தொழிற்சாலை , மேட்டூர் காகித தொழிற்சாலை ஆகியவை காமராஜ் ஆட்சியில் ஏற்பட்டன.

நாட்டிற்குத் தேவையான முக்கியமான பொருளாதார வளர்ச்சியின் முதுகெலும்புகள் இத் தொழிற்சாலைகளாகும். கிராமப் பகுதிகளுக்கு மின்சாரத்தைக் கொண்டுசெல்லும் திட்டத்தில் தமிழகம் இந்தியாவிலேயே முதன்மை இடம்வகித்தது.

1955 தொடக்கம் 1961இல் , 13 , 300 கிராமங்கள் மின்சார வசதிபெற்றன. நீர்ப்பாசன வசதிக்காக மின்சாரம் பயன்படுத்தல் மற்ற வாகனங்களைக் காட்டிலும் தமிழகத்தில் தான் அதிகம். மின்சாரம் உபயோகிக்கும் மாநிலங்களில் தமிழகமே முதலிடம் வகிக்கின்றது.

1959இல் சென்னை மின்சார நிலையம் விஸ்தரிப்புக்கான செலவு 2.71கோடி ரூபாவாகும். 9 கோடி ரூபாய் செலவில் பெரியாறு மின்சாரத் திட்டம் செய்துமுடிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 1இலட்சம் கிலோ வாட் மின்சக்தி உற்பத்தியானது. குந்தா திட்டம் 3.5கோடி ரூபா செலவில் அமைந்தது. இத்திட்டம் மற்ற நாடுகளும்பார்த்து அதிசயிக்கக் கூடியமுறையில்வெகு விரைவில் நமது எஞ்சினியர்களால் கட்டிமுடிக்கப்பட்டது.

(தொடரும்)




கந்தரோடை வீரகத்தி விநாயகர் ஆலய

அலங்கார உற்சவம்

மூன்றாம் திருவிழா 01.08.2006

ஆறுதலைத் தந்திடுவாய்

ஆனை முகத்தவனே அம்பிகையின் மைந்தனே
அஞ்சாத மனமுந்தந்து அபயமளித்துக் காத்து
ஆறாத துயரத்தை ஆற்றுவித் தருளியே
ஆறுதலைத் தந்திடுவாய் ஆலடி நாயகனே

குகதாசசர்மா சிவகுமார்
மயிலணி ,சுன்னாகம்


## விசர் நோய்த் தடுப்பூசி

சாவகச்சேரி நகரசபை பொதுச் சுகாதாரப் பகுதியினரால் இன்று தொடக்கம் 7 ஆம் திகதி வரையுள்ள காலப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாகவும் பின் குறிப்பிடப்படும் தினங்கள் ,நேரங்களில் தவறாது தடுப்பூசிகளை ஏற்றிக் கொள்ளும்படியும் அந்தக் காலப் பகுதியில் நாய்களைக் கட்டி வளர்க்கும்படியும் கட்டாத நாய்கள் பிடிக்கப்படும் என்றும் பொது சுகாதாரப் பரிசோதகர் கர்ணன் தெரிவித்துள்ளார்.

இன்று கச்சாய் ஆரம்ப சுகாதார நிலையம் , வினோபா பாலர் பாடசாலை , ஊற்று நிறுவனம் கலைமகள் ச.ச.நிலையம், வைரவர் கோவிலடி கிராம அலுவலர் அலுவலகம், கிராம முன்னேற்ற சங்கம் , பிள்ளையார் கோவிலடி கிணத்தடிச்சந்திப் பகுதியிலும் ,

நாளை அல்லாரை தெற்கு ஆலடிச்சந்தி , அல்லாரை தெற்கு கிராம சேவகர் அலுவலகம் , ஐங்கரன் பாலர் பாடசாலையடி , குடும்பக் கட்டுப்பாட்டு அலுவலகம், பிள்ளையார் கோவிலடி ஜஸ்மின் ச.ச.நிலையம், தெ.ப. பொருள் உற்பத்தி நிலையம் பகுதியிலும் ,

நாளை மறுதினம் மதுவன்பாலர் பாடசாலை , பாலையடி ச.ச.நிலையம் , சிறிமுருகன் ச.ச.நிலையம், மாவடிப்பிள்ளையார் கோவிலடி , பண்றிக் கேணி முருகன் கோவிலடி , சித்திரவேலாயுதர் கோவிலடி , நெ.முருகன் கோவிலடி ,ஊர் எல்லைச் சந்தி , செஞ்சிலுவைச் சங்க பழைய கட்டடம் மீசாலை கிழக்குப் பகுதிகளிலும்,

எதிர்வரும் 4ஆம் திகதி மீசாலை மேற்கு வீனஸ் ச்.ச.நிலையம் , ஊர் எல்லைச் சந்தி , விக்னேஸ்வரா பாடசாலையடி , குடும்ப சுகாதார உதவி பணிமனை, புதிய புகையிரத நிலையம் , பொது-சுகாதார அலுவலகம் , மடத்தடி சந்தி பெரிய அரசடி ச.ச.நிலையம், சங்கத்தானை அம்மன் கோவி லடி பகுதிகளிலும் ,

5ஆம் திகதி நாமகள் பாடசாலை , இத்தியடி ச.ச.நிலையம் , சாரதா ச.ச.நிலையம், சங்கத்தானை கி.சே.அலுவலகம் , முருகன் கோவில் சங்கத்தானை, தாமோதரம்பிள்ளை வீதிச் சந்தி , இந்து ஆரம்பப் பாடசாலை , வைரவர் கோவில் , மீனாட்சி அம்மன் கோவில் பகுதிகளிலும் ,

6ஆம் திகதி அப்துல்லா சந்தி , உப்பு கேணியடி , பெரியமாவடி ச.ச. நிலையம் , றோமன் க.த.க.பாடசாலை , முருகன் கோவிலடி , கோவில் குடியிருப்பு கி.அ.அலுவலகம் , புளியடிசந்தி சக்தி அம்மன் பாடசாலை பகுதிகளிலும் ,

7ஆம் திகதி பூவேந்தன் பாலர் பாடசாலை , புளியடிசந்தி குடும்பக்கட்டுப்பாடு அலுவலகம் , டச்சு வீதி ப.நோ.கூட்டுறவு சங்கம் , மிருக வைத்தியர் சாவகச்சேரி அலுவலகம் , கயிலாய பிள்ளையார் ஒழுங்கை ஆகிய பகுதிகளில் விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (அ-29)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை உயர்தர மாணவ மன்ற மாணவர்களின் ஒன்றுகூடல் விழாவிலே பிரதம விருந்தினராக யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி திருமதி சஞ்சிதா முகுந்தன் அழைத்துச் செல்லப்படுவதையும், அதிபர் திருமதி எஸ்.சுந்தரேசன், பிரதி அதிபர் திருமதி ஐ.ஸ்ரீரங்கன், பகுதித் தலைவர் திருமதி எம். தங்கராஜா உட்பட உயர்வகுப்பு மாணவர் மன்றத்தினரையும் காணலாம். (படம் :-பருத்தித்துறை நிருபர்

## ஐ.தே.கட்சி மறுசீரமைப்பு

(கொழும்பு)

செப்டெம்பர் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் 60ஆவது ஆண்டு நிறைவை மாநாட்டுக்கு முன்னர் கட்சியின் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஆகஸ்ட் மாத இறுதியில் கட்சியின் கீழ் மட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படவுள்ளது. இதனிடையே ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து சென்று அரசாங்கத்தில் இணைந்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி கூடும் செயற்குழுக் கூட்டத்தில் இந்த உறுப்பினர்களை கட்சியில் இருந்து நீக்குவது குறித்த கடுமையான தீர்மானங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

அரசாங்கத்தில் இணைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் நடத்தப்படவுள்ளன.அத்துடன் கட்சியின் யாப்பு சட்டத்திற்கு அமைவாக இவர்களை கட்சியில் இருந்து நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.(அ)



பிலிப்பைன்ஸ் நகரில் லெக்காஸ்பி நகர் அருகே உள்ள கிராமத்தில் எரிமலை இப்படி புகையை கக்கியபடி குமுறி கொண்டிருக்கிறது. ஆனாலும் மக்கள் அச்சப்படாமல் இப்பகுதியை விட்டு இன்னும் இடம் பெயரவில்லை.

# தஜிகிஸ்தானில் நில நடுக்கத்துக்கு 1000க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம்

முன்னாள் சோவியத் யூனியனில் ஒரு பகுதியாக இருந்து 1991ஆம் ஆண்டு தனியாக பிரிந்து சென்ற நாடுகளில் ஒன்று தஜிகிஸ்தான். இங்குள்ள கும்சாங்ஜின் பகுதியில் நேற்று முன்தினம் திடீர் என்று நில நடுக்கம் ஏற்பட்டது. அந்த நில நடுக்கம் ரிக்டர் அளவில் 5.5 புள்ளிகளாக பதிவானது.

இந்த நிலநடுக்கத்தால் தெற்கு பகுதியில் ஏராளமான வீடுகள் இடிந்து தரைமட்டமாகி விட்டது. 3 கிராமங்கள் அடியோடு அழிந்து மண்ணோடு மண்ணாகிவிட்டன. இதில் 3 குழந்தைகள் பலியாகிவிட்டதாக முதல்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. 100க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். 1000க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விட்டன. இந்த பகுதியில் உயரமான கட்டடங்கள் அதிகம் இல்லாததால் உயிர் சேதம் அதிகளவு ஏற்படவில்லை. (அ)

# அணு உலை கட்டுவது உண்மையே ஏற்றுக்கொண்டார் பாக். அமைச்சர்

(கோலாலம்பூர்)

தங்கள்நாட்டில் பிரமாண்டமான அணு உலை கட்டப்பட்டு வருவதை பாகிஸ்தான் ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால் அந்த அணு உலை மூலம் அணு குண்டுகள் தயாரிக்கப்படுமா என்பது குறித்து பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் கசூரி கருத்துக் கூற மறுத்துவிட்டார். பாகிஸ்தானில் பஞ்சாப் மாகாணத்தில் ஏற்கனவே ஒரு அணு உலை உள்ளது. இதன் அருகே மற்றொரு பிரமாண்டமான அணு உலையை பாகிஸ்தான் கட்டி வருகிறது. இதன்மூலம் ஆண்டுக்கு 200 கிலோ யுரேனியம் உற்பத்தி செய்யமுடியும் .இந்த யுரேனியத்தை வைத்து 40 முதல் 40 அணு குண்டுகளை தயாரிக்க முடியும் என்று சமீபத்தில் அமெரிக்க பத்திரிகைகளில் செய்திகள் வெளியாயின. இதையடுத்து, உலக நாடுகளின் பார்வை பாகிஸ்தான் பக்கம் திரும்பியது.

கோலாலம்பூரில் நடக்கும் ஒரு மாநாட்டில் பங்கேற்க பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் கசூரி வந்திருந்தார். அவரிடம் இதுகுறித்து கேட்ட போது புதிய அணு உலை கட்டப்படுவதை உறுதிசெய்தார். பாகிஸ்தான் அரசு தரப்பில் இருந்து இந்த விஷயத்தை ஒப்புக்கொள்வது இதுவே முதல்முறை. இதுகுறித்து குர்ஷித் கசூரி மேலும் கூறியதாவது,

இது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. உலக நாடுகள் ஏற்கனவே அறிந்த ஒன்றுதான். அந்த அணு உலை எங்களிடம் பாதுகாப்பாக உள்ளது. அணு உலையை கட்ட துவங்கி ஐந்து ஆண்டுகளாகி விட்டது. இறுதி கட்டப் பணிகள் நடந்து வருகின்றன. அணு உலை எப்போது செயல்பட துவங்கும் என்பது எனக்கு தெரியாது. அந்த அணு உலையில் அணு குண்டுகள் தயாரிக்கப்படுமா என்பதை இப்போது கூற முடியாது. எனினும் சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டே அணு உலையின் செயல்பாடு இருக்கும். இந்த புதிய அணு உலையால் இந்தியாவுடன் நாங்கள் ஆயுத போட்டியில் இறங்கியுள்ளோம் என்று கூறி விடமுடியாது.

இந்தியா-பாகிஸ்தான் இடையே அமைதி நடவடிக்கைகள் மேற்கொள்ளும் போது இதுபோன்ற அணு உலைதேவையா என்று எங்களிடம் கேட்காதீர்கள். அணு ஆய்வு திட்டத்தை துவக்கியது முதலில் இந்தியா தான். அவர்களிடம் இந்த கேள்வியை கேளுங்கள். பாகிஸ்தானின் அணு ஆயுத தந்தை அப்துல் காதிர்கானின் நெட்ஓர்க் அழிக்கப்பட்டு விட்டது. ஆனால்தஅவரை அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகள் கேள்வி கேட்க அனுமதிப்பதில்லை என்று பாகிஸ்தான் அரசுமுடிவு செய்தது சரியான நடவடிக்கையே .சில நாடுகளுடன் நாங்கள் ஒத்துழைப்புடன் இருக்கிறோம். எந்த ளவுக்கு இந்த ஒத்துழைப்பு இருக்க வேண்டும் என்பதை அந்த நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும் .இவ்வாறு குர்ஷித் கசூரி கூறினார். (அ)



அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் புளோரிடா மாநிலத்தின் மியாமிப் பகுதிக்கு சென்றார். அவரை புளோரிடா கவர்னரும் புஷ்ஷின் தம்பியுமான ஜெப் புஷ்ஷும் (வலதுபக்கம்)பிரதிநிதிகள் சபை உறுப்பினர் இலினாராகும் வரவேற்றனர். ஜார்ஜ் புஷ்ஷை அவரது தம்பி கட்டித தழுவி வரவேற்கும் காட்சி.

# லெபனான் மீதான குண்டுத்தாக்குதலில் அப்பாவி மக்கள் 55 பேர் பலி

(டைரி)

லெபனானின் தெற்கு பகுதியில் உள்ள கிராமத்தின் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று முன்தினம் குண்டுகள் வீசியதில் அப்பாவி மக்கள் 55 பேர் கொல்லப்பட்டனர். லெபனானின் தெற்கு பகுதியில் உள்ளது குனா என்ற கிராமத்தில் உள்ள அடுக்குமாடி கட்டடத்தில் 100க்கும் மேற்பட்ட மக்கள் இருந்தனர். இந்த கட்டடத்தின் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று முன்தினம் சரமாரியாக குண்டுகள் வீசியதில் 55 பேர் கொல்லப்பட்டனர். மேலும் இஸ்ரேலில் உள்ள மெடுலா என்ற கிராமத்தில் இருந்து இஸ்ரேல் வீரர்கள் லெபனானில் உள்ள கியாம் என்ற நகருக்குள் நுழைய முற்பட்டனர். அவர்களின் முன்னேற்றத்தை தடுக்க ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் கடும் தாக்குதலை நடத்தி வருகின்றனர். சிரியாவில் உள்ள டமாஸ்காஸ் நகரையும் லெபனானையும் இணைக்கும் முக்கிய சாலை மீது இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டுகள் வீசின. இதில் அந்த சாலை கடுமையாக சேதமடைந்துள்ளது. இதற்கிடையில் இஸ்ரேல் லெபனான் மோதலை முடிவுக்கு கொண்டுவரும் முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன. இது குறித்த பிரிட்டன் பிரதமர் டோனி பிளேயர் கூறுகையில், லெபனானில் அமைதிப்படை ஒன்றை ஏற்படுததுவது தான் பிரச்சினைக்கு தீர்வாக அமையும். இன்னும் சில நாட்களில் அமை திப்படை அமைக்கப்படலாம் என்றார். இந்த அமைதி முயற்சிக்கு ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஹசன் நசரல்லா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

இதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டோலீசா ரைஸ் லெபனான் மீது சில நிபந்தனைகளை விதிக்க திட்டமிட்டுள்ளார்.

இஸ் ரேலுக்கு சாதகமாக அவரது நடவடிக்கை கள் உள்ளன என்றார். அதே நேரத்தில் போர் நிறுத்தத்துக்கு அவசரம் காட்ட அவசியம் இல்லை என்று இஸ்ரேல் தரப்பில் தெரிவிக் கப்பட்டுள்ளது. பிரிட்டன் பிரதமர் டோனிப் பிளேயரிடம் அமெரிக்க அதிபர் புஷ் மன் னிப்பு கேட்ட பிறகும் அமெரிக்க போர் விமானம் ஒன்று இஸ்ரேல் செல்லும் வழியில் பிரிட்ட னில் உள்ள பிரஸ்ட்விக் விமான நிலையத்தில் எரிபொருளை நிரப்ப சென் றது. இன்றும் இதேபோல் ஒரு அமெரிக்க விமானம் செல்லும் என்று கூறப்பட்டுள்ளது.

லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது சரமாரியாக ராக்கெட்



களை வீசி வருகின்றனர். இதனால் இஸ்ரேலின் வடக்கு பகுதியில் இருந்து மூன்று லட்சத்து 30 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்துள்ளனர். என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. லெபனான் மீது தாக்குதல் நடத்திவரும் இஸ்ரேல் நேற்று பலஸ்தீனத்தை சேர்ந்த காசா பகுதியிலும் ஏவுகனை தாக்குதலை நடத்தியது. இதில் யாரும் காயமடையவில்லை. லெபனானின் தெற்கு பகுதியில் ஐ.நா.அமைதிப் படை ஒன்று செயல்பட்டு வருகிறது.

இதில் இந்திய இராணுவ வீரர்களும் இடம்பெற்றுள் ளனர். இஸ்ரேல் லெபனான் எல்லையில் உள்ள அதாயீஸ் என்ற கிராமத்தின் மீது இஸ் ரேல் போர் விமானங்கள் குண்டுகள் வீசின. இதில் ஐ.நா.அமைதிப் படையில் இடம்பெற்றுள்ள இந்திய வீரர்கள் இரண்டு பேர் காயமடைந்தனர் இதுகுறித்த ஐ.நா. அமைதிப் படை செய்தி தொடர்பாளர் கூறுகையில், காயமடைந்த இந்திய வீரர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட னர். இந்தத் தாக்குதலில் ஐ. நா.அமைதிப் படையின் கண்காணிப்பு கோபுரமும் சேதமடைந்துள்ளது. என்றார் கடந்த 16ஆம் திகதி இதேபோல நடந்த ஒரு தாக்குதலில் ஒரு இந்திய விரர் படுகாயம் அடைந்தார். என்பது குறிப்பிடத் தக்கது. (அ)

# ஹிஸ்புல்லாவுக்கு ஈரான் ஆயுதம் வழங்குவதாக அமெரிக்கா குற்றச்சாட்டு

(டெக்ரான்)

லெபனான் நாட்டில் செயல்பட்டுவரும் ஹிஸ்புல்லா இயக்கத்தினருக்கு ஈரான் நாடு ஆயுதங்களை வழங்கி வருகிறது என்று அமெரிக்க ஜனாதிபதி புஷ் குற்றஞ்சாட்டி வருகிறார். இந்தக்குற்றச்சாட்டை ஈரான் மறுத்து உள்ளது. இது தொடர்பாக ஈரான் வெளி நாட்டு இலாகா அதிகாரி ஹமீது ரெசா அசெபி கூறியதாவது,

இஸ்ரேலை தாக்கும் ஏவுகணைகள் ஈரானில் தயாரிக்கப்பட்டவை என்று புகார் கூறப்படுகிறது. 1980 களில் நாங்கள் அந்தக்குழுவுக்கு நிதி உதவி செய்தோம், ஆயுதங் களை வழக்கினோம். சமீபகாலமாக எங்கள் உதவி அரசியல் ரீதியானது.

மனிதாபிமான நோக்கத்தில் அமைந்தது. நாங்கள் ஆயுத உதவி அளித்தால் அதை வெளிப்படையாக அறிவித்துவிட்டு செய்வோம் இவ்வாறு அந்த அதிகாரி கூறினார். (அ)



லெபனானில் தாக்குதல் நடத்தி வரும் இஸ்ரேலை கண்டித்து ஹிசபுல்லா தீவிரவாத ஆதரவாளர்கள் பெய்ரூட்டில் உள்ள ஐ. நா., அலுவலகம் உள்ளே புகுந்து தாக்குதல் நடத்தினர்.

- ஒரு மனிதனின் உண்மைத் தன்மையை அறிய வேண்டுமானால் அவன் கையில் அதிகாரத்தைக் கொடுத்துப் பார்க்க வேண்டும்.

- இங்கர்சால்

வலம்புரி

# கண்காணிப்புக் குழுவின் கடமைப்பாடு என்ன?

யுத்த நிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இல்லையென யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழு அறிவிக்கவேண்டும்.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கேட்டுள்ளார்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவருக்கு எழிலன் அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்ட கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

எழிலன் எழுதிய கடிதம் தொடர்பில் கருத்துக் கூறிய கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் யுத்த நிறுத்தம் நடைமுறையில் இல்லை என்பதை அறிவிக்கும் பொறுப்பு தமக்குரியதல்ல என்றும் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் சம்பந்தப்பட்டவர்களே அதனைத் தெரிவிக்கவேண்டுமென்றும் கூறியுள்ளார்.

கண்காணிப்புக்குழுத்தலைவர் கூறிய கருத்தில் இருக்கக்கூடிய குழப்பம், தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

அதாவது, யுத்தநிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இல்லை என்பதற்கும் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிக்கொள்கிறோம் என்ற அறிவிப்பிற்கும் இடையில் நிறையவே வேறுபாடு உண்டும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையைச் செய்து கொண்ட அரசும் விடுதலைப்புலிகளும் யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவிக்க முடியும்.அல்லது இரு தரப்பும் சேர்ந்து உடன்படிக்கையை முடிவுறுத்தலாம்.

ஆனால் , யுத்தநிறுத்த உடன்படிக்கையை நடைமுறையில் இருக்கிறதா? இல்லையா? என்பதை அறிவிக்கும் பொறுப்பு கண்காணிப்புக்குழுவினுடையதாகும்.

கண்காணிப்புக்குழுவின் கடமை யுத்தநிறுத்தம் மீறப்படுவதை கண்காணிப்பதாகும். இதனை மறுபுறமாகக்கூறுவதாயின் யுத்தநிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவதே அதன் பணியாகும்.

எனவே யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஆரோக்கியப்பாடு பற்றிய தகவல்களை அறிவிக்கும் பணியை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவே செய்தாகவேண்டும்.

அவர்கள் மெளனமாக இருப்பார்களாயின் உண்மை நிலைதெரியாதுபோகும். எனவே யுத்த நிறுத்த உடன்படிக்கை செம்மையாகச் செயற்படுவது அல்லது அதனை குறித்த தரப்பினர் மீறியுள்ளனர் என்பதை எதுவித ஒளிவு மறைவுமின்றி தெரியப்படுத்துவதன் ஊடாகவே யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஆரோக்கியப்படுத்த முடியும்.

அவ் வகையில் தற்போது நாட்டில் இடம் பெற்றுவரும் தாக்குதல்கள் உச்சம் பெற்றுள்ள நிலையில்,யுத்த நிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருக்கிறதா? இல்லையா? என்பதை கண்காணிப்புக்குழுவே தெரிவித்தாகவேண்டும்.

இதனைத் தெரிவிக்க அவர்கள் மறுப்பார்களாயின் அவர்கள் எதைத்தான் தெரிவிப்பார்கள் என்ற கேள்வி பொதுமக்களிடையே ஏற்படுவது தவிர்க்கமுடியாததே.


# உயிரைக் கொடுத்தாவது அணையை திறப்போம்

## — எல்லாவல மேதாநந்த தேரர்-சூளுரை —

(கொழும்பு)

அரசாங்கம், அதிகாரிகள், அரச படைகளுக்கு மாவிலாறு அணைக்கட்டை திறக்க முடியாவிட்டால் உயிரை கொடுத்தாவது நாம் அணையை திறக்க வைப்போம். விடுதலைப் புலிகள் அவ்வணையை மூடி அப் பிரதேசத்தில் பரம்பரையாக வாழும் சிங்களவர்களை வெளியேற்றுவதற்கு முயற்சி செய்கின்றனர்.

இதனை விளங்கிக்கொள்ளாத அரசாங்கம் புலிகள் மீது தரைவழியாக தாக்குதல் நடத்த இன்னும் தயக்கம் காட்டுவது ஏன்? என்று ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதாநந்ததேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.



கல்லாறு பிரதேசத்தில் இருந்து சுமார் நாலரை கிலேமீற்றர் தூரத்திலுள்ள மாவிலாறு அணைக்கட்டை இராணுவத்திற்கு திறக்க முடியாவிட்டால் தமது உயிரைக் கொடுத்தாவது அதனை திறப்பதற்கு பிரதேச வாசிகள் தயாராகிவிட்டனர்.

எனினும் அரசாங்கப் படையினர் அதற்கு இடமளிக்க மறுத்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(அ)

# அரசின் தாக்குதல்கள் நிறுத்தப்படும்வரை கண்காணிப்புப் பணி இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற விமானத்தாக்குதல்கள் நிறுத்தப்படும் வரை தமது கண்காணிப்புப்பணியை இடைநிறுத்தியுள்ளதாக இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

விமானத் தாக்குதல்கள் மற்றும் ஏனைய படை நகர்வுகளுக்கும் தாக்குதல்களுக்கும் மத்தியில் கண்காணிப்பாளர்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் உள்ளமையினாலேயே இவ்வாறானதொரு முடிவை கண்காணிப்புக்குழு எடுத் துள்ளது என்று கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தொஃப்பினூர் ஓமர்சன் கொழும்பு நாளேடு ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இரு தரப்பிற்கும் இடையில் தாக்குதல்கள் நடைபெறும் போது அங்கு கண்காணிப்பாளர்கள் தமது பணியை முன்னெடுப்பது என்பது அவர்களுடைய உயிருக்கும் ஆபத்தானதாக அமையலாம்.

ஆகவே சர்வதேச கண்காணிப்பாளர்களின் பாதுகாப்பு கருதி போர் நடக்கும் இடங்களில் குழு தனது பணியை முன்னெடுக்காது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை போர்நிறுத்த கண்காணிப்புக்குழு தமது கண்காணிப்புப்பணிகள் அனைத்தையும் நிறுத்தியிருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதே நேரம் ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடான பின்லாந்து தனது கண்காணிப்பாளர்களை விடுதலைப் புலிகளின் நிபந்தனைக்கு அமைய பாதுகாப்பு காரணங்களுக்காக திருப்பி அழைத்துக்கொள்வதாக கடந்த புதன் கிழமை அறிவித்தது.

அதேபோன்று இன்னொரு ஐரோப்பிய ஒன்றிய நாடான டென்மார்க் கடந்த வெள்ளிக்கிழமை தனது கண்கணிப்பாளர்களையும் திருப்பி அழைக்கும் முடிவை குழுவின் தலைமைப்பீடத்திற்கு அறிவித்துள்ளதாக பேச்சாளர் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் விதித்துள்ள காலக்கெடுவான செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு முன்னர் இந்த இரு நாட்டு கண்காணிப் பாளர்களும் திருப்பி அழைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றிய நாடான சுவீடன் இன்னமும் எந்த முடிவும் தனது வெளியேற்றம் குறித்து அறிவிக்கவில்லை. குழுவின் தலைவர் உல்ப்ஹென்றிக்சன் சுவீடன் நாட்டைச்சேர்ந்தவராதலால் சுவீடன் அரசு தனது முடிவை வெளியிட சற்று கால தாமதமாகலாம் எனத் தெரியவருகிறது. (அ)

# உற்சவகாலங்களில் மின்வெட்டை நிறுத்த யாழ்.மாநகர ஆணையாளர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் திருவிழாக்காலங்களில் ஏற்பட்ட இரவு நேர மின்வெட்டு தொடர்பாக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க உள்ளதாக யாழ்.மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் யாழ். நகரின் வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் கந்தன் ஆலய மகோற்சவம் ஆரம்பமாயுள்ளது. இவ்வாலய ஒழுங்கு தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் கலந்தாலேசிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்ட போது அன்றைய தினம் இரவு ஏற்பட்ட மின் தடைபற்றிக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இத் திடீர் மின் தடை பக்தர்களுக்கும் தொண்டர் நிறுவனங்களுக்கும் வியாபாரிகளுக்கும் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இம் மின் தடை தொடர்ச்சியாக ஏற்படுமானால் திருடர்களின் கைவரிசை அதிகரிக்கப்படலாம் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

(அ-133)

# வரட்சியால் பாதிக்கப்படும் கால்நடைகள்

(கோண்டாவில்)

யாழ். குடாநாட்டில் தற்போது நிலவி வருகின்ற வரட்சியான காலநிலை காரணமாக கால்நடைகள் உணவு, குடிநீர் இன்றித் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கால்நடைகள் உணவாகக் கொள்ளும் புல், பூண்டுகள் வரட்சியினால் கருகிப் போவதனாலும் மரங்களில் போதியளவு இலைகள் இல்லாமையினாலும் கால் நடைகளுக்கு போதியளவு உணவு கிடைப்பதில்லை. வரட்சியினால் நீர் நிலைகள் வற்றிப் போவதால் குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும் கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாக விளங்குவதும் இலகுவில் கிடைக்கக்கூடியதுமான முள்முருக்கு இலைகளில் விசித்திரமான ஒரு நோய் ஏற்பட்டுள்ளதாலும் கால்நடைகளின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதுள்ளது .

இந்நிலை தொடருமானால் பாலுற்பத்தியும் குறைவடைந்து போகலாம் என கால்நடை வளர்ப்போர் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கட்டாக்காலி கால்நடைகளும் தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்காக தோட்டங்களுக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்வதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.(து-36)

# "ஒப்பந்த மீறல்களை நிறுத்துமாறு நோர்வே தூதரகம் கோரிக்கை

(கொழும்பு)

போர் நிறுத்த ஒப்பந்தத்தை பாதிக்கும் செயற்பாடு களில் ஈடுபடுவதை இருதரப்பும் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று நோர்வே கோரியுள்ளது. போர் நிறுத்த ஒப்பந்த மீறல்கள் தொடருமானால், சமாதான செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத இக்கட்டான நிலை ஏற்படும் . எனவே இருதரப்பினரும் தாக்கு தல்களை நிறுத்தவேண்டும் என்று நோர்வே தூதரகத்தின் பதில் பேச்சாளர் டொம் கப்ஸ்கொக் கொழும்பு ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,


போர் நிறுத்த ஒப்பந்த மீறல்களை நோர்வே என்றுமே ஏற்றுக்கொள்ளாது. ஒப்பந்தம் தகர்க்கப்படும்போது அது ஒரு முழு அளவிலான போராக மாறும் அபாயம் உண்டு. தற்போதைய நிலைமை மிகவும் ஆபத்தானது.இருதரப்பும் இணக்கப்பாட்டிற்கு வருவது அவசியமாகும். போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு அமைவாக நடக்குமாறும் நாம் இருதரப்பையும் கோருகின்றோம்.

இதேவேளை, நோர்வேத் தூதுவரான ஹன்ஸ் பிறட்ஸ்கர் தனது ஒஸ்லோ பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று இலங்கைக்கு வந்தார். நோர்வே அரசின் முக்கிய செய்திகளோடு இவர் வரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேநேரம் நோர்வேயின் இலங்கைக்கான சிறப்பு சமாதானத் தூதுவரான ஜோன் ஹன்சன் பௌயர் இவ்வார இறுதியில் இலங்கை வரவுள்ளார். (அ)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



நேர்மை இருக்கும் இடத்தில்தான் கட்டுப்பாடு இருக்கும் இடத்தில்தான்- முறையான உழைப்பு இருக்கும் இடத்தில்தான் சிறந்த எழுத்தோவியங்களும் கலைகளும் ஆன்மீகமும் உருவாகும்.

# மோதல்களைத் தவிர்க்குமாறு கண்காணிப்புக்குழு வேண்டுகோள்

போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு கண்காணிப்புப் பணிகளை மாத்திரம் புரிகிறது. அது அமைதியினைக் காக்கும் பணிகளில் ஈடுபடவில்லை. ஆகவே இது போன்ற நடவடிக்கையில் இருந்து ஒதுங்கியிருப்பதனையே நாம் விரும்புகிறோம் என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொர்பின் ஓமர்சன் தெரிவித்தார்.

மாவிலாற்றில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்திற்கும் இடையே நடைபெற்று வரும் மோதல் தொடர்பாக பி.பி.சி. தமிழோசைக்கு அளித்த செவ்வியில் அவர் இவ்வாறு கூறினார்.

இரு தரப்பினரையும் மோதலைத் தவிர்க்குமாறு கேட்டுள்ளோம். முதலாவதாக சிங்கள மக்களுக்குச் செல்லும் நீர்விநியோகத்தை தடுத்ததன் மூலம் விடுதலைப்புலிகள் தவறு செய்துள்ளதாகவே நாம் கருதுகிறோம்.

அதனைத் தொடர்ந்து அரச படைகளின் சண்டை மிகவும் உக்கிரமாகவிருக்கிறது. ஆகவே இருதரப்பினரும் மக்களின் உயிருக்கு அச்சத்தை ஏற்படுத்துவதோடு நாட்டின் அமைதி முயற்சிகளுக்கும் அச்சத்தை ஏற்படுத்தி வருகிறார்கள் எனவும் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் குறிப்பிட்டார்.

போர் நிறுத்த உடன்படிக்கை தற்போது கடைபிடிக்கப்படுவதெனக் கூறுவது கடினம். இருப்பினும் அந்த உடன்படிக்கை ஏட்டளவில் கையொப்பமிட்ட ஆவணமாகவே இருந்து வருகிறது. அதனை ஒருதரப்பேனும் நீக்கவில்லை.

ஆகவே அவ்வுடன்படிக்கை செல்லுபடியான ஒன்றாகவேயுள்ளது. அதனைத் தொடர்ந்தும் இருதரப்பினரும் காப்பாற்றுவார்கள் எனவும் நம்புவதாக தொர்பின் ஓமர்சன் தெரிவித்தார். (ச-5)

## கண்காணிப்...

தற்போது போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவில் 58 உறுப்பினர்கள் உள்ளனர். அதில் 22 பேர் பின்லாந்து மற்றும் டென்மார்க்கைச் சேர்ந்தவர்களாவர்.

ஐரோப்பிய ஒன்றிய கண்காணிப்பாளர்கள் செப்ரெம்பர் முதலாம் திகதிக்கு போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிலிருந்து விலக வேண்டும் என விடுதலைப்புலிகளினால் தெரிவிக்கப்பட்டிருந்தமையை அடுத்து மற்றும் டென்மார்க் நாட்டு உறுப்பினர்கள் கண்காணிப்புப் பணியிலிருந்து விலகிவிட்டார்கள்.

இந்த இரு நாடுகளினதும் இந்த செயற்பாடு விடுதலைப்புலிகளுக்கு சாதகமாக அமைந்திருப்பதாகவும் இது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடன் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் அரசாங்கப் பேச்சாளர் கெஹலியரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

முழு உலகுமே பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகையில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் விடுதலைப்புலிகளின் தேவைக்கமைய செயற்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (ச-5)

## எரிபொருட்களின் விலை அதிகரிப்பு

எரிபொருட்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது. பெற்றோல், டீசல் என்பவற்றின் விலை 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக




லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த வாரமளவில் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 6 ரூபாவினாலும் டீசலின் விலை 8 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளதுடன் மண்ணெண்ணெய்யின் விலை 20 ரூபாவால் அதிகரிக்கவும் அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

இந்த விலை அதிகரிப்புத் தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுஸ்தாபனத்திற்கும் நிதியமைச்சுக்கும் இடையில் பல சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளது.

இரண்டு மாதங்களுக்கு முன்னதாகவும் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டால் மாவிலாறு அணைக்கட்டு சேதமடையும்!

## ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மாவிலாறு அணைக்கட்டைத் திறப்பதற்காக குண்டுகளை வீசுவதனால் அணைக்கட்டு சேதமடையக் கூடும் என்பதால் போர் நிறுத்த உடன்படிக்கைக்கு அமைய செயற்படுமாறு ஐக்கிய தேசியக் கட்சி, படையினரையும் விடுதலைப்புலிகளையும் கேட்டுள்ளது.

அத்துடன் மகிந்த சிந்தனைகளுக்கேற்ப தற்போதைய நெருக்கடிகளை ஜெனீவா உடன்படிக்கையுடன் தொடர்பு படுத்துவதன் ஊடாக விடுதலைப்புலிகளை தனிராச்சியம் என்ற நிலைக்கு உயர்த்தியிருப்பதாகவும் அக் கட்சி கூறியுள்ளது.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி பொதுமக்களுக்குத் தண்ணீர் வழங்குவதற்கு விடுதலைப்புலிகள் தடைவிதித்திருப்பதனை கண்டிப்பதாகக் கூறியுள்ளது.

சேருநுவர மக்களுக்கான நீர் வழங்குதலை தடை செய்வது கிழக்கு மூதூர் மற்றும் ஈச்சிலம்பற்று பிரதேச மக்களின் குடிநீர், உணவு மற்றும் விவசாயம் போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாது.

அத்துடன் இராணுவத்தினரும் விடுதலைப் புலிகளும் குண்டுத் தாக்குதல் நடத்துவதும் அதற்குத் தீர்வாக அமையாது என ஐக்கிய தேசியக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## செல்வா...

பொருத்தப்பட்டிருப்பதானல் விடுதலைப் புலிகளின் விமானப்படை பிரிவு பற்றியதகவல்களை கண்டறியக்கூடியதாக உள்ளதாகவும் அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச-5)

## திருகோண...

ட்றக் வாகன சாரதியான எம்.ஜி.லலித் நந்தசிறி என்பவர் அடையாளம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். செல்வநாயகபுரத்தில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். (ச-5)

# கடத்தப்பட்ட இளைஞன் நேற்று சடலமாக மீட்பு

சிறுப்பிட்டியிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட இளைஞன் நேற்று சடலமாக மீட்கப் பட்டுள்ளார். நேற்று முன்தினம் சிறுப்பிட்டியிலுள்ள அவரது பெற்றோல் நிரப்பு நிலையத்தில் வைத்து கடத்தப்பட்ட அவர் நேற்று உடுப்பிட்டி அம்மன் கேணியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இமையாணன் கிழக்கு உடுப்பிட்டியைச் சேர்ந்த விஸ்வலிங்கம் கௌரூபன்(வயது-24) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவர். (ச-5,101)




# மாவிலாற்றில் உக்கிர மோதல்...

நேற்றைய தாக்குதல் தொடர்பாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது;

திருமலை, ஈச்சிலம்பற்று, மாவிலாறுப் பகுதியை கைப்பற்றும் நோக்கத்துடன் நேற்று இராணுவத்தினரால் பெரும்எடுப்பில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்த மும்முனைப் படை நகர்வு முயற்சி விடுதலைப்புலிகளால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் கிபீர் மற்றும் மிக் ரக விமானங்கள் குண்டுகளைப் பொழிய, ஆட்லறி பல்குழல் எறிகணை சூட்டாதரவுடன் கனரக யுத்த தளபாடங்கள் சகிதம் முன்னேற முற்பட்ட படைகள் மீது தமிழீழ விடுதலைப்புலிகளால் உக்கிர பதிலடித் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன.

திருமங்கலம் படைமுகாமிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத்திற்குட்பட்ட அங்கோடைப் பகுதியைநோக்கி முன்னேற முயன்ற படையணி ஒன்றை வால்கொட்டுப் பகுதியில் எதிர்கொண்ட போராளிகள் உக்கிர பதிலடித் தாக்குதலைத் தொடுத்து படையினரை விரட்டியடித்தனர்.

சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்திற்கு முன்னேறிய படையினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் பதிலடித் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது தப்பியோடினர்.

ஏக காலத்தில் மாவிலாற்றிலிருந்து 5 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கல்லாறு காட்டுப்புறம் ஊடாக ஈச்சிலம்பற்றுப் பிரதேசத்தை நோக்கி முன்னேற முற்பட்ட படைகளை வழிமறித்து தாக்கிய விடுதலைப்புலிகள் படையினருக்குப் பலத்த சேதாரங்களை ஏற்படுத்தி விரட்டியடித்தனர்.

இதேபோன்று காட்டுப்பாதையூடாக படைகள் மேற்கொண்ட மூன்றாவது படை நகர்வு முயற்சியும் தமிழீழ விடுதலைப்புலிகளால் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.

தப்பியோடிய படைகளை இலக்கு வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளின் பீரங்கிப் படையணிப் போராளிகளால் மூர்க்கத்தனமாக எறிகணைத் தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணத்தின் வழிநடத்தலில் களம் இறங்கிய விடுதலைப்புலிகளின் படையணிகள் படைகளின் வலிந்த ஆக்கிரமிப்பு முயற்சியை வெற்றிகரமாக முறியடித்திருப்பதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இளந்திரையன் தெரிவித்தார்.

நேற்றைய முறியடிப்புச் சமரில் தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் மூன்று போராளிகள் வீரச்சாவைத் தழுவியதோடு மேலும் இருவர் காயத்திற்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இத் தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட 20 இராணுவத்தினர் பலியாகினதோடு மேலும் 50 வரையில் படுகாயமடைந்துள்ளனர் என விடுதலைப்புலிகள் தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

இது இவ்வாறிருக்க பாரிய இழப்புக்கள் மத்தியில் படையினர் நேற்று மாலையும் படை நகர்வை மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

இதன் அறிகுறியாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் நோக்கி ஆட்லறி, பல்குழல் பீரங்கிகள், உலங்குவானூர்தித் தாக்குதலை படையினர் ஆரம்பித்துள்ளதாகவும் எழிலன் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாவிலாறு அணையை திறப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை வெற்றிகரமாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந் நடவடிக்கை காரணமாக 7படையினர் உயிரிழந்ததாகவும் 10 பேர் காயமடைந்ததாகவும் அவர்கள் சேருநுவர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

தமது தாக்குதலில் 35 விடுதலைப்புலிகள் உயிரிழந்ததாகவும் அவர் தெரிவித்தார். தமது படைகள் மாவிலாற்று அணையை அண்மித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அணையை மீட்டு திறக்கும்வரை விமானம் மற்றும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.? இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2006 இல் அச்சிட்டுவெளியீடப்பட்டது.